தின பூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 247 ஆடி 26
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, திங்கள், ஆகஸ்ட் 11, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**உக்ரைன் அமைதிக்காக அறிக்கை: ஐரோப்பிய தலைவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜெலன்ஸ்கி**

....2-ம் பக்கம்

**பீகார் துணை முதல்வர் பெயரில் இரண்டு வாக்காளர் அட்டை: தேஜஸ்வி யாதவ் குற்றச்சாட்டு**

...3-ம் பக்கம்

**ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப்: இந்தியாவின் ரமேஷ் புதிஹால் வெண்கலம் வென்று சாதனை**

....6-ம் பக்கம்






● சென்னை சைதாப்பேட்டை தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவரும், மூத்த கல்வியாளருமான மறைந்த வே.வசந்திதேவியின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். இதில் மார்க்சிய கம்யூ. கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மாநில செயலாளர் பெ.சண்முகம், நீதிபதி ஹரி பரந்தாமன், மகளிர் ஆணையத்தின் தலைவர் ஏ.எஸ்.குமரி உள்ளனர்.

### திருப்பூர், உடுமலை நேதாஜி மைதானத்தில் இன்று

# ரூ.949.53 கோடியில் திட்டப்பணிகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

*** ரூ.182.6 கோடியில் 35 புதிய திட்டப்பணிகளுக்கும் அடிக்கல்**
*** ரூ.295.29 கோடியில் நலத்திட்ட உதவிகளையும் வழங்குகிறார்**

உடுமலை, ஆக. 11-

**உடுமலை நேதாஜி மைதானத்தில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு ரூ.949 கோடியே 53 லட்சம் மதிப்பில், 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைப்பதுடன், ரூ.182 கோடியே 6 லட்சம் மதிப்பில் 35 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். ரூ.295 கோடியே 29 லட்சம் மதிப்பில் 19,785 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகிறார்.**

**கள ஆய்வுப்பணி....**

முதல்வர் மு.க.ஸ்டாலின் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் இன்று கள ஆய்வுப்பணி மேற்கொள்கிறார். இதற்காக நேற்று மாலை 5.25 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வரும் அவர், அங்கிருந்து கார் மூலம் திருப்பூர் மாவட்டம் உடுமலை சென்றார்.

**முதல்வர் ஆலோசனை**

2026 சட்டமன்ற தேர்தல் வியூகம் தொடர்பாக திருப்பூர் மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் சேர்க்கை, உங்களுடன் ஸ்டாலின் திட்டப்பணிகள் குறித்து கட்சியினருடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் இரவு உடுமலை அரசு விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வெடுத்தார்.

**தலைவர்கள் சிலைகள்**

இன்று (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு உடுமலை நகராட்சி சார்பில் வாரச்சந்தை வளாகத்தில் அம்பேத்கர், பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் முழு உருவ வெண்கல சிலைகளை திறந்து வைக்கிறார். பின்னர் உடுமலை நேதாஜி மைதானத்தில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு ரூ.949 கோடியே 53 லட்சம் மதிப்பில், 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைப்பதுடன், ரூ.182 கோடியே 6 லட்சம் மதிப்பில் 35 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

**புதிய டைடல் பூங்கா...**

நகராட்சித்துறையின் சார்பில் ரூ.34 கோடியே 80 லட்சம் மதிப்பில் திருப்பூர் மாநகராட்சி கோவில் வழி யில் கட்டப்பட்டுள்ள புதிய பஸ் நிலையம், திருப்பூர் வேலம்பாளையம் அரசு மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.41 கோடி மதிப்பில் 100 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடம், திருமுருகன்பூண்டியில் ரூ.39.44 கோடி மதிப்பில் கட்டப் பட்டுள்ள டைடல் பூங்கா ஆகியவற்றை காணொலி மூலம் திறந்து வைக்கிறார். மேலும் ரூ.295 கோடியே 29 லட்சம் மதிப்பில் 19,785 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகிறார்.

**தி.மு.க. அலுவலகம்...**

பின்னர் 11.30 மணிக்கு உடுமலை நகர தி.மு.க. அலுவலக புதிய கட்டிடத்தை திறந்து வைக்கிறார். பகல் 12 மணிக்கு கோவை மாவட்டம் பொள்ளாச்சிக்கு புறப்பட்டு செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின் பொள்ளாச்சி யில் உள்ள பரம்பிக்குளம் ஆழியார் திட்ட வளாகத்தில் பி.ஏ.பி., பாசன திட்டம் அமைய காரணமானவர்களான காமராஜர், சி.சுப்பிரமணியம், வி.கே.பழனிச்சாமி கவுண்டர், பொள்ளாச்சி மகாலிங்கம் ஆகியோரின் முழு உருவ சிலைகளை திறந்து வைக்கிறார்.

**சென்னை திரும்புகிறார்**

அதன்பிறகு பரம்பிக்குளம் ஆழியாறு அணை கட்டுமான பணியின் போது உயிரிழந்த தொழிலாளர்களின் நினைவரங்கத்தை திறந்து வைக்கிறார். மதியம் 2 மணிக்கு கோவையில் இருந்து விமானம் மூலம் சென்னை திரும்புகிறார். உடுமலையில் 2 நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர். கோவை, மடத்துக்குளம், உடுமலை உள்ளிட்ட இடங்களில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

### தனி முத்திரை பதித்தவர்:

# கல்வியாளர் வசந்திதேவிக்கு முதல்வர் ஸ்டாலின் புகழாரம்

சென்னை, ஆக.11-

**சிறந்த கல்வியாளராக தனி முத்திரை பதித்தவர் முனைவர் வசந்திதேவி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டினார்.**

சென்னை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மறைந்த முனைவர் வே. வசந்தி தேவியின் நினைவேந்தல் நிகழ்ச்சியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:- கல்வி என்பது வியாபாரப் பொருளாகவோ, அதிகாரக் கோட்டைக்குள் பாதுகாக்கப்படுகிற ஆயுதமாகவோ இல்லாமல் - ஏழை - எளிய மக்களுக்கு கிடைக்க வேண்டும்; கல்விதான் அவர்களுக்கான ஆயுதம், அதுதான் அழிக்கமுடியாத செல்வம் என்கின்ற நோக்கத்தோடு தொடர்ந்து செயலாற்றி, அதற்கான இயக்கங்களை முன்னெடுத்தவர் முனைவர் வசந்திதேவி.

சிறந்த கல்வியாளராக, தனி முத்திரை பதித்தவர் முனைவர் வசந்திதேவி. கல்வியில் சீர்திருத்தத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்தியவர். கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரித்து நின்றவர். முனைவர் வசந்திதேவியின் நினைவைப் போற்றும் இந்த நேரத்தில், அனைவருக்குமான கல்வி உரிமையை நிலைநாட்டுகின்ற திராவிட மாடல் அரசினுடைய செயல்பாடுகள் அனைத்தும் அம்மையாருக்கு செலுத்துகின்ற ஆக்கப்பூர்வமான அஞ்சலி என்று கூறி, முனைவர் வசந்திதேவிக்கு என்னுடைய புகழஞ்சலியை செலுத்துகிறேன்.. நன்றி! வணக்கம்!. இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளரும், மத்தியக் குழு உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், நீதியரசர் ஹரி பரந்தாமன், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் ஏ. எஸ். குமரி, வழக்கறிஞர் ஹென்றி திபேன், பள்ளிக் கல்வி பாதுகாப்பு இயக்கம், ஏ.ஐ.டி. இந்தியா, அகில இந்திய ஜனநாயக மகளிர் சங்கம், கல்விக்கான அடிப்படை உரிமைக்கான தமிழ்நாடு கூட்டணி, அறப்போர் இயக்கம், சமகல்வி இயக்கம், இந்திய மாணவர் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### வாக்கு திருட்டு குற்றச்சாட்டு விவகாரம்:

# டெல்லியில் இன்று 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் பேரணி

புதுடெல்லி, ஆக. 11-

**வாக்குத் திருட்டு குற்றச்சாட்டு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில், இன்று (ஆகஸ்ட் 11) புதுடெல்லியில் பேரணி நடைபெறவுள்ளது. பேரணி முடிவில் தலைமைத் தேர்தல் ஆணையரை சந்திக்கின்றனர்.**

2024-ம் ஆண்டு கர்நாடகத்தில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பெங்களூரு, மகாதேவபுரா சட்டப் பேரவைத் தொகுதியில் வாக்காளர் பட்டியல் சட்ட விரோதமாக திருத்தப்பட்டதாகவும், இதன்மூலம் வாக்குகள் திருடப்பட்டதாகவும் காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி குற்றம் சாட்டியிருந்தார்.

இதுதொடர்பான ஆதாரங்களை புதுடெல்லியில் வியாழக்கிழமை ராகுல் காந்தி வெளியிட்டுள்ளார். மேலும், மக்களவைத் தேர்தலில் நடந்ததாக கூறப்படும் தேர்தல் மோசடியைக் கண்டித்து, பெங்களூரு, சுதந்திரப் பூங்காவில் கடந்த வெள்ளிக்கிழமை ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதேநேரம், ராகுல் வெளியிட்ட தரவுகள் தவறானவை என்று தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்தது.

இந்நிலையில் பாராளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கி ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்குச் செல்லும் இந்த பேரணியில் இன்டியா கூட்டணியைச் சேர்ந்த எம்.பி.க்கள் பங்கேற்க உள்ளனர். பேரணியின் முடிவில் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களையும் அவர்கள் சந்திக்க உள்ளனர்.

இந்த பேரணி இன்று காலை 11:30 மணிக்கு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நாளில், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சாணக்கியபுரியில் உள்ள ஹோட்டல் தாஜ் பேலஸில் இன்டியா கூட்டணி எம்.பி.க்களுக்கு இரவு விருந்தும் அளிப்பார் என்றும் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### வாக்காளர் பட்டியல் திருத்த விவகாரம்: பீகாரில் நீக்கப்பட்ட

# 65 லட்சம் பேரின் விவரங்களை வெளியிடுவது கட்டாயமில்லை

## சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் ஆணையம் பதில்

புதுடில்லி, ஆக. 11-

**பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து எந்தவொரு வாக்காளரும் முன்னறிவிப்பு இன்றி நீக்கப்பட மாட்டார்கள் என சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது. மேலும், பீகாரில் நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை வெளியிடுவது கட்டாயமில்லை என்றும் தேர்தல் கமிஷன் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளது.**

பீகாரில் தீவிர வாக்காளர் சிறப்பு திருத்தப்பணி முடிந்த நிலையில், கடந்த 1-ந்தேதி, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில், 7 கோடியே 24 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே இருந்தன. 65 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டு இருந்தன. அவர்களில், 22 லட்சத்து 34 ஆயிரம் பேர் இறந்து விட்டதாகவும், 36 லட்சத்து 28 ஆயிரம் பேர் நிரந்தரமாக இடம்பெயர்ந்து விட்டனர் அல்லது முகவரியில் காணவில்லை என்றும், 7 லட்சம் பேர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பெயர் சேர்த்து இருப்பதாகவும், அதனால் மேற்கண்ட 65 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்தது.

இந்த நிலையில், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டால் நாங்கள் தலையிடுவோம் என்று சுப்ரீம் கோர்ட்டு கூறியிருந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கில், தேர்தல் ஆணையம் சுப்ரீம் கோர்ட்டில் பிரமாணப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது. அதில், 65 லட்சம் வாக்காளர்களின் விவரத்தை யாரும் கேட்கவில்லை. வாக்காளர் பட்டியலில் இருந்து வாக்காளர்கள் நீக்கிய காரணத்தை தெரிவிக்க வேண்டும் என்ற விதி சட்டத்தில் இல்லை. மனுதாரர்கள் உரிமைக் கோர முடியாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், எந்தவொரு வாக்காளரும் முன்னறிவிப்பின்றி நீக்கப்பட மாட்டார்கள் என்றும் அதற்கு முன்னர் நோட்டீஸ் வழங்கப்பட்டு, கருத்துகள் கேட்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் வழங்க கால அவகாசம் கொடுக்கப்படும், எந்த ஒரு ஆவணமும் வழங்க முடியாமல் இருக்கும் வாக்காளர்களுக்கு உரிய ஆவணங்கள் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்." என்றும் தெரிவித்துள்ளது.

### பாகிஸ்தானை மண்டியிடச்செய்த

# புதிய இந்தியாவை பார்த்து உலகமே வியந்தது: பிரதமர்

பெங்களூரு, ஆக.11-

**ஆப்பரேஷன் சிந்தூரின் போது, பயங்கரவாதத்துக்கு ஆதரவாக வந்த பாகிஸ்தானை சில மணி நேரத்தில் மண்டியிட வைத்த புதிய இந்தியாவை உலகமே கண்டு வியந்ததாக பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.**




பெங்களூரின் ஆர்.வி. ரோடு - பொம்மசந்திரா இடையே மஞ்சள் வழித்தடத்தில் ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயில் சேவையையும், 3 வந்தே பாரத் ரயில் சேவையையும், பிரதமர் நரேந்திர மோடி நேற்று துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது; ஆப்பரேஷன் சிந்தூர், இந்திய படைகளின் வெற்றியைக் காட்டியது. எல்லைக்கு அப்பால் பல கிலோ மீட்டர் தூரத்தில் பயங்கரவாதிகளின் மறைவிடங்களை நாங்கள் அழிக்கும் திறனையும், பயங்கரவாதத்துக்கு ஆதரவாக வந்த பாகிஸ்தானை சில மணி நேரத்தில் மண்டியிட வைக்கும் நமது ஆற்றலையும் உலகம் கண்டது. இந்த புதிய இந்தியாவின் முகத்தை முழு உலகமே பார்த்தது.

புதிய இந்தியாவின் அடையாளமாக பெங்களூரு மாறியுள்ளது. பெங்களூருவின் வெற்றிக்கு பின்னணியில் இங்குள்ள மக்களின் கடுமையான உழைப்பும் திறமையும்தான் காரணம்.

உலகில் 3வது மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாக நாம் வேகமாக முன்னேறி வருகிறோம். கடந்த 2014ம் ஆண்டில் நம் நாட்டில் வெறும் 5 நகரங்களில் மட்டுமே மெட்ரோ ரயில்சேவை இருந்தது. தற்போது, 24 நகரங்களில் சுமார் 1,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவுகளில் மெட்ரோ ரயில்சேவை வழங்கப்படுகிறது.

அதேபோல, 2014க்கு முன், ரயில் பாதையில் சுமார் 20,000 கிலோ மீட்டர் மின்மயமாக்கப்பட்டது. கடந்த 11 ஆண்டுகளில் மட்டும் 40,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான ரயில் பாதைகள் மின்மயமாக்கியுள்ளோம். 2014 வரையில் இந்தியாவில் வெறும் 74 விமான நிலையங்கள் மட்டுமே இருந்தன.

தற்போது அதன் எண்ணிக்கை 160க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. நீர்வழி போக்குவரத்து வழித்தடங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. 2014ல், வெறும் 3 தேசிய நீர்வழித்தடங்கள் மட்டுமே செயல்பாட்டில் இருந்தன. இப்போது இதன் எண்ணிக்கை 30ஆக உயர்ந்துள்ளது,

இவ்வாறு அவர் கூறினார்.

### தொடரும் ஆப்பரேஷன் அகல்:

# காஷ்மீரில் பயங்கரவாதி சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், ஆக. 11-

**காஷ்மீரில் 10வது நாளாக தொடர்ந்து வரும் 'ஆப்பரேஷன் அகல்' ராணுவ நடவடிக்கையில் பயங்கரவாதி ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான்.**

ஜம்மு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் உள்ள அகல் வனப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அப்பகுதியில் போலீசாருடன் இணைந்து பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைக்கு 'ஆப்பரேஷன் அகல்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் 10வது நாளான நேற்று பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கிடையே, காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் உள்ள துல் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக, உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதில் இரண்டு பயங்கரவாதிகளை பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக பிடித்துள்ளனர். அப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையின சந்தேகப்படுகின்றனர். இதனால் தொடர்ந்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

## 3 தாய்லாந்து வீரர்கள் காயம்

கம்போடியா எல்லையில் கண்ணிவெடியில் சிக்கி நேற்று 3 தாய்லாந்து வீரர்கள் படுகாயமடைந்தனர். இருநாட்டு எல்லையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த தாய்லாந்து வீரர்கள் கண்ணிவெடியில் சிக்கினர்.

இந்த கண்ணிவெடி கம்போடியாவால் பதித்து வைக்கப்பட்டதாக தாய்லாந்து குற்றஞ்சாட்டியுள்ளது. இதனால், இருநாடுகளுக்கும் இடையே மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி

திருப்பூர் மாவட்டத்தில் வாய்க்காலில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த இரண்டு சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை கிராமம், ஸ்ரீமாரியம்மன் நகரைச் சேர்ந்த மணிகண்டன் பிரபு (13 வயது) த/பெ.தினேஷ்குமார் மற்றும் காமராஜ் நகரைச் சேர்ந்த மோகன் பிரசாத் (13 வயது) த/பெ.ராமச்சந்திரன் ஆகிய இரண்டு சிறுவர்களின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## லோகேஷ் கனகராஜ் நெகிழ்ச்சி

நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் கூலி. இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். கூலி திரைப்படம் ஆகஸ்ட் 14-ம் தேதி வெளியாகிறது. இப்படத்தின் முன்பதிவுகளில் மட்டும் 50 கோடி ரூபாய்க்கும் மேல் வசூலித்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில், இசையமைப்பாளர் அனிருத்துடன் எடுத்த புகைப்படத்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் பகிர்ந்துள்ளார். அப்புகைப்படத்தின் பின்னணியில் கூலி படத்தின் ரஜினிகாந்தின் கண்கள் திரையில் உள்ளது.

### உக்ரைன் அமைதிக்காக அறிக்கை:

# ஐரோப்பிய தலைவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜெலன்ஸ்கி

**கீவ், ஆக. 11-**



உக்ரைன் தேசத்தின் அமைதிக்காக இன்று உக்ரைனுக்கும், மக்களுக்கும் ஆதரவு அளிப்பவர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என அந்த நாட்டின் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022-ம் ஆண்டு தொடங்கிய உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரை நிறுத்த பல்வேறு உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராகி உள்ள ட்ரம்ப், தனது தேர்தல் பிரச்சாரம் மற்றும் பல்வேறு உரைகளில் தொடர்ந்து உக்ரைன் - ரஷ்யா போர் நிறுத்தம் குறித்து பேசி வருகிறார்.

இந்த சூழலில் ஐரோப்பாவில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்கள் உக்ரைனில் அமைதி திரும்ப வேண்டும் என கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர். இதில் பிரான்ஸ் அதிபர் மக்ரோன், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, ஜெர்மனியின் அதிபர் ஃபிரெட்ரிக் மெர்ஸ், பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மர், போலந்து பிரதமர் டொனால்டு டஸ்க், பின்லாந்து அதிபர் ஸ்டப் மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

“போரின் முடிவு நியாயமானதாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன். உக்ரைனின் அமைதிக்காக உக்ரைனுடனும், மக்களுடனும் நிற்கும் அனைவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். இது நமது ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு நலனை உறுதி செய்கிறது.

உக்ரைனின் அமைதிக்காக பேசி அறிக்கை வெளியிட்டுள்ள அதிபர் மக்ரோன், பிரதமர் மெலோனி, அதிபர் மெர்ஸ், பிரதமர் ஸ்டார்மர், பிரதமர் டஸ்க், அதிபர் ஸ்டப் மற்றும் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோரை உக்ரைன் முழுமையாக ஆதரிக்கிறது” என ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

### கென்யாவில் சோகம்:

# பஸ் கவிழ்ந்து 25 பேர் பலி

**நைரோபி, ஆக. 11-**

கென்யாவில் பஸ் கவிழ்ந்த விபத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.

ஆப்பிரிக்க நாடான கென்யாவின் நியாஹெரா நகரில் இருந்து நியாகாச்சிற்கு ஒரு பஸ் சென்று கொண்டிருந்தது. இந்த பஸ்சில் சுமார் 50 பேர் பயணித்தனர். அவர்கள் அனைவரும் உறவினரின் இறுதிச் சடங்கை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். ககமேகா நெடுஞ்சாலையில் சென்றபோது அந்த பஸ் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் நிலைதடுமாறி சாலையோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 10 பெண்கள் உள்பட 25 பேர் பலியாகினர். படுகாயம் அடைந்த 20 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், சாலையோரம் பஸ் கவிழ்ந்த விபத்தில் பலியானோருக்கு அந்நாட்டின் அதிபர் வில்லியம் ரூட்டோ இரங்கல் தெரிவித்தார்.

# அயர்லாந்து: இந்திய குடும்பம் மீது தாக்குதல்

**டப்ளின், ஆக. 11-**

அயர்லாந்தில் பஸ் நிறுத்தத்தில் தனது 60 வயது தந்தையை இரண்டு சிறுவர்கள் இனரீதியான துன்புறுத்தல் மற்றும் தகாத நடத்தைக்கு ஆளாக்கியதாக இந்திய வம்சாவளி பெண் ஒருவர் குற்றம் சாட்டி உள்ளார்.

அயர்லாந்தில் இந்தியர்கள் மீதான தாக்குதல் அடிக்கடி, நிகழ்ந்து வருகிறது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு டாக்ஸி டிரைவரும், ஆறு வயது சிறுமியும் தாக்கப்பட்டனர். நாடு முழுவதும் உடல் ரீதியான தாக்குதல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, இந்தியர்கள் விழிப்புடன் இருக்குமாறு அயர்லாந்தில் உள்ள இந்திய தூதரகம் அறிவுறுத்தி உள்ளது.

இந்தியர்கள் மீதான தாக்குதல்களுக்கு மத்தியில், டப்ளினில் உள்ள ஒரு பஸ் நிறுத்தத்தில் தனது 60 வயது தந்தையை இரண்டு சிறுவர்கள் இனரீதியான துன்புறுத்தல் செய்ததாக இந்திய வம்சாவளி பெண் போலீசில் புகார் அளித்து உள்ளார்.

## கமல்ஹாசனுக்கு கொலை மிரட்டல்

**சென்னை, ஆக. 11-**



கமல்ஹாசனுக்கு கொலை மிரட்டல் தொடர்பாக கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவரான கமல்ஹாசன் எம்.பி. சென்னையில் நடந்த ஒரு விழாவில் சனாதனம் பற்றி பல்வேறு கருத்துக்களை தெரிவித்து இருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் துணை நடிகரான ரவி என்பவர் பேட்டி அளித்துள்ளார். அதில் கமல்ஹாசனின் சங்கை அறுப்போம் என்று கொலை மிரட்டல் விடுத்து உள்ளார். இதனை கண்டித்து மக்கள் நீதி மையம் கட்சி சார்பில் துணைத் தலைவர் மவுரியா மற்றும் நிர்வாகிகள் கவிஞர் சினேகன், முரளி அப்பாஸ், மயில்வாகனன், அர்ஜுனர் ஆகியோர் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நேற்று புகார் அளித்தனர். அதில் கமல்ஹாசனுக்கு கொலை மிரட்டல் விடுத்த நடிகர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

### பயணிக்கு அழுக்கான இருக்கை:

# இண்டிகோ விமான நிறுவனத்துக்கு அபராதம்

**மும்பை, ஆக. 11-**

பயணி ஒருவருக்கு அழுக்கான கறை படிந்த இருக்கையை வழங்கியதற்காக இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 2 ஆம் தேதி பாகுவிலிருந்து டெல்லிக்கு பயணம் செய்யும் போது அழுக்கு மற்றும் கறை படிந்த இருக்கை வழங்கப்பட்டதாகக் கூறி பிங்கி என்ற பெண் புகார் அளித்தார். இந்த புகாரை டெல்லி மாவட்ட நுகர்வோர் குறைதீர் தீர்வு ஆணையம் விசாரித்தது. இந்நிலையில், குறைபாடுள்ள சேவையால் பயணிக்கு ஏற்பட்ட சிரமம் மற்றும் மன வேதனைக்கு இழப்பீடாக ரூ.1.5 லட்சம் வழங்க விமான நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளது. மேலும் வழக்குச் செலவாக ரூ.25,000 செலுத்தவும் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

### இந்திய விமானங்கள் பறக்க தடை:

# பாகிஸ்தானுக்கு ரூ.1,240 கோடி இழப்பு

**இஸ்லாமாபாத், ஆக. 11-**

பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான் எல்லையை பயன்படுத்த தடை விதித்தது அந்நாட்டு அரசு. இந்திய அரசும் இதே நடவடிக்கையை கையில் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதம் 24-ம் தேதி இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான் எல்லையை பயன்படுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்போது முதல் கடந்த ஜூன் 30-ம் தேதி வரையிலான காலகட்டத்தில் மட்டும் இதனால் பாகிஸ்தானுக்கு சுமார் 1,240 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது பாகிஸ்தான் ரூபாய் மதிப்பில் 4.1 பில்லியன். இதை அந்த நாட்டின் செய்தி நிறுவனம் அரசு தரப்பு தகவல் உடன் உறுதி செய்து செய்தியாக வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் இதை பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் உறுதி செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. பஹல்காம் தாக்குதலை அடுத்து சிந்து நதி நீரை நிறுத்தியது. இதற்கு எதிர்வினையாற்றும் வகையில் பதிவு செய்யப்பட்ட இந்திய விமானங்கள், இந்திய விமான நிறுவனங்கள் சார்பில் இயக்கப்படும் விமானங்கள் என இந்திய தொடர்பு கொண்ட அனைத்து விமானங்களுக்கும் பாகிஸ்தான் தடை விதித்தது.

இதன் காரணமாக பாகிஸ்தான் நாட்டின் வான் போக்குவரத்து சுமார் 20 சதவீதம் குறைந்துள்ளது. இந்த தடை நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நாள் ஒன்றுக்கு 100 முதல் 150 இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்தி வந்ததாக தகவல். இப்போது அது முற்றிலுமாக தடைப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இந்தியாவில் இருந்து அயல்நாடுகளுக்கு செல்லும் இந்திய விமானங்கள் மாற்றுப்பாதையில் தடையின்றி பயணத்தை தொடர்ந்து வருகிறது. மறுபக்கம் பாகிஸ்தானுக்கு இதே உத்தரவை இந்தியா பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### 4.7 ரிக்டர் அளவில்

# வங்கக்கடலில் நிலநடுக்கம்

**புதுடெல்லி, ஆக. 11**

வங்கக்கடலில் நேற்று மதியம் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. மதியம் 12.02 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.7 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் 10 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் 14.04 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 92.95 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

### 35 ஆண்டுகால மோதல் முடிவு வந்தது:

# அர்மீனியா - அஜர்பைஜான் ஒப்பந்தம்

**மாஸ்கோ, ஆக. 11-**



ரஷ்யாவின் தெற்கே தெற்கு காகசஸில் உள்ள ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் ஆகிய இரு நாடுகள் நீண்ட காலமாக மோதலில் ஈடுபட்டு வந்தது. இந்நிலையில் 35 ஆண்டுகால மோதலை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் வைத்து இரு நாட்டு தலைவர்களும் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

அமெரிக்கா சென்றுள்ள அஜர்பைஜான் அதிபர் இல்ஹாம் அலியேவ் மற்றும் ஆர்மீனிய பிரதமர் நிகோல் பாஷினியன் ஆகியோர் அதிபர் டிரம்ப் முன்னிலையில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு கைகுலுக்கிக்கொண்டனர். எரிசக்தி, தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்த அமெரிக்காவுடன் ஆர்மீனியாவும் அஜர்பைஜானும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக அஜர்பைஜானை நக்சிவானுடன் இணைக்கும் ஒரு பெரிய போக்குவரத்து வழித்தடத்தை உருவாக்குவதற்கான திட்டம் உள்ளது. ஒப்பந்தத்தின்படி இந்த வழித்தடத்தின் உரிமைகளை அமெரிக்கா சொந்தமாக்கிக் கொள்ளும். இது சர்வதேச அமைதி மற்றும் செழிப்புக்கான “டிரம்ப் பாதை” என்று அழைக்கப்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்தப் பாதை இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், எரிசக்தி துறைகளில் புதிய வாய்ப்புகளைத் திறக்கும் என்று கூறப்படுகிறது. இதை ஐரோப்பிய நாடுகள் வரவேற்றாலும், இரு நாடுகளுடனும் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் ஈரான் இது அமெரிக்காவின் ஆதிக்கத்தை உருவாக்கும் என்று எச்சரித்துள்ளது.

# பாக்., ராணுவ தளபதி மீண்டும் அமெரிக்கா பயணம்

**நியூயார்க், ஆக. 11-**

பாகிஸ்தான் ராணுவ தலைமைத் தளபதி ஆசிம் முனீர் ஆபரேஷன் சிந்தூருக்குப்பின் இரண்டாவது முறையாக மீண்டும் அமெரிக்காவுக்கு சென்றுள்ளார். அங்கு அவர் ராணுவ உயரதிகாரிகளையும், முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

முன்னதாக கடந்த ஜூன் மாதம், ஆசிம் முனீர் 5 நாள்கள் பயணமாக அமெரிக்கா சென்று அந்நாட்டு அதிபர் டிரம்ப்பை நேரில் சந்தித்து பேசினார். அப்போது, வெள்ளை மாளிகையில் அவருக்கு அதிபர் டிரம்ப் விருந்தளித்தார். இந்தநிலையில், அவரது இந்த திடீர் பயணம் எதற்காக என்பது குறித்தும் அவர் எத்தனை நாள்கள் அங்கிருப்பார் உள்ளிட்ட விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இதனிடையே, ஆசிம் முனீர் அமெரிக்காவில் வசிக்கும் பாகிஸ்தான் வம்சாவளி மக்களிடையே உரையாற்றியிருப்பதும் கவனிக்கத்தக்கது. அப்போது அவர், ‘பாகிஸ்தானுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதாகவும், பாகிஸ்தானில் அதிக முதலீடு செய்யவும்’ அழைப்பு விடுத்துள்ளார்.

டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு பாகிஸ்தானுடன் அதிக நெருக்கம் பாராட்டி வருவதை இந்தச் சந்திப்பு பிரதிபலிக்கிறது. பாகிஸ்தானின் தலைமைப் பதவிக்கு ஆசிம் முனீர் இலக்கு நிர்ணயித்து செயல்படுவதாக அந்நாட்டின் அரசியல் வட்டாரங்கள் எதிரொலிக்கும் நிலையில், அதை மெய்ப்பிக்கும் விதத்தில் மேற்கண்ட செயல்பாடுகள் அமைந்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

### டிரம்ப் - புடின் பேச்சுவார்த்தை:

# உக்ரைன் அதிபருக்கு அழைப்பா? வெள்ளை மாளிகை பரிசீலனை

**வாஷிங்டன், ஆக. 11-**

வரும் 15ம் தேதி அமெரிக்கா - ரஷ்யா அதிபர்கள் நடத்தும் பேச்சுவார்த்தையில் பங்கேற்க உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கிக்கும் அழைப்பு விடுப்பது தொடர்பாக வெள்ளை மாளிகை பரிசீலனை செய்து வருகிறது என தகவல் வெளியாகி உள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. இதனை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆர்வம் காட்டி வருகிறார். ஆனால், அவரின் முயற்சியை ரஷ்ய அதிபர் புடின் கண்டுகொள்ளவில்லை. இதனையடுத்து போரை நிறுத்த டிரம்ப் கெடு விதித்தார். பொருளாதார தடை விதிக்கப்படும் என கெடு விதித்தார். இதையடுத்து, ரஷ்ய அதிபர் புடினை, டிரம்ப்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் சந்தித்தார்.

தொடர்ந்து அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் டிரம்ப் - புடின் வரும் 15ம் தேதி சந்தித்து பேச்சு நடத்த உள்ளனர். அப்போது போர்நிறுத்தம் முக்கிய பேசுபொருளாக இருக்கும் என தகவல் வெளியாகி உள்ளது. உக்ரைன் தரப்பில் முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அதனை ரஷ்யா ஏற்கவில்லை. ஆனால் இந்த விஷயத்தில் உக்ரைன் இல்லாமல் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கு ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து இருந்தன.

இந்த நிலையில், டிரம்ப் - புடின் இடையிலான பேச்சுவார்த்தையில் பங்கேற்க உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கிக்கு அழைப்பு விடுப்பது குறித்து வெள்ளை மாளிகை பரிசீலனை செய்து வருவதாக, அமெரிக்கா ஊடகம் தெரிவித்துள்ளது. ஆனால், இந்த அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தையில் ஜெலன்ஸ்கி பங்கேற்பாரா என்பதில் தெளிவாக தெரியவில்லை எனவும் கூறியுள்ளது.

### காசாவை கைப்பற்றும் முடிவுக்கு எதிர்ப்பு:

# இஸ்ரேலுக்கு வழங்கும் ஆயுத சப்ளை நிறுத்தியது ஜெர்மனி

**பெர்லின், ஆக. 11-**

காசாவை முழுமையாக கைப்பற்ற இஸ்ரேலின் ராணுவ அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்த நிலையில், அந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, இஸ்ரேலுக்கான ஆயுத வினியோகத்தை நிறுத்துவதாக ஜெர்மனி அறிவித்துள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேல், ஹமாஸ் பயங்கரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள தன் அண்டை பகுதியான காசா மீது 2023ல் போர் துவங்கியது. ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேல் நகரங்களுக்குள் புகுந்து 1,200 பேரை கொன்றதே இந்த போருக்கு காரணம்.

காசாவின் 80 சதவீத பகுதி தற்போது இஸ்ரேல் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 20 சதவீத பகுதிகளிலும் தாக்குதல்களை தீவிரப்படுத்தி, தங்கள் வசப்படுத்த இஸ்ரேல் திட்டமிட்டது.

பிணைக்கைதிகள் அங்கு இருக்கக் கூடும் என்பதால், அவர்கள் இறக்க நேரிடும் என கூறி இஸ்ரேல் ராணுவ தளபதி எதிர்ப்பு தெரிவித்தார். அவரது எதிர்ப்பையும் மீறி காசாவை முழுமையாக கைப்பற்றும் திட்டத்துக்கு ராணுவ அமைச்சரவையின் ஒப்புதலை அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சமீபத்தில் பெற்றார்.

இந்நிலையில், ஜெர்மனி சான்சிலர் பிரெட்ரிச் மெர்ஸ் கூறுகையில், “காசா நகரை கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டத்தால் அந்நாட்டுக்கான ராணுவ உபகரணங்களின் ஏற்றுமதியை நிறுத்தி உள்ளோம்.

‘‘இஸ்ரேல் அரசு காசாவின் பொதுமக்களுக்கு உதவி வழங்குவதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். ஐ.நா., அமைப்புகள் மற்றும் பிற தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்,’’ என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## 11-08-2025




**மேஷம்:-** புதிய பணிக்கான உத்திரவுகள் வரலாம். மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும். புதிய திருப்பங்கள் ஏற்பட்டு எதிர்காலம் ஒளிமயமாக அமையும்.

**ரிஷபம்:-** எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். பெயரும், புகழும் உயர்ந்து பெருமை தரும் நாள். தொழிலில் தனவரவு தொடரும் நாள். புத்தாடை, ஆபரணம் புதிதாகச் சேரும் நாள்.

**மிதுனம்:-** மனதில் அமைதி நிலவும். தெய்வீக திருப்பணிகளில் ஈடுபாடு ஏற்படும். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். தொழில் விஷயங்களில் அரசு ஆதரவும், நன்மைகளும் உண்டு.

**கடகம்:-** ஆரோக்கியக் குறைவினால், மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். அதன் காரணமாக அரசுப் பணியாளர்கள் லீவு எடுக்க வேண்டியதிருக்கும். தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் தாமதப்படும்.

**சிம்மம்:-** பொருளாதார நிலை உயரும். வியாபார விஷயமாக செல்லும் வெளியூர் பயணங்களால் லாபம் ஏற்படும். அன்பு மனைவியின் அரவணைப்பால் அகம் மகிழும். அரசால் ஆதாயம் உண்டு. 7

**கன்னி:-** திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடந்து, எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். பெயரும், புகழும் உயர்ந்து பெருமை தரும் நாள். தொழிலில் தனவரவு தொடரும் நாள்.

**துலாம்:-** குழந்தைகளின் பொறுப்பற்ற தன்மையினால் நிம்மதி குறையும். தங்கள் திறமைக்கு மதிப்பு இருக்காது. நல்லவர் போல் நடித்து நண்பர்கள் நயவஞ்சகம் செய்வார்.

**விருச்சிகம்:-** கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல்கள் ஏற்பட்டதால். மனக்கலக்கம் ஏற்படலாம். வீண் செலவுகள், பயணங்களில் தடங்கல்களும் ஏற்படும். தாய்க்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம்.

**தனுசு:-** பழைய பாக்கிகள் விரைவாக வசூலாகும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தடையின்றி தனவரவு அதிகரிக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். தொழிலில் பணியாட்களின் ஒத்துழைப்பால் லாபம் அதிகரிக்கும்.

**மகரம்:-** பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருக்கும். அரசுப் பணியாளர்களுக்கு தேவையற்ற இடமாற்றங்கள் ஏற்படலாம். கூட்டாளிகளை அனுசரித்து சென்றால் பிரச்சனைகளை சமாளிக்கலாம்.

**கும்பம்:-** மனத் திருப்தி மற்றும் தனவரவு தரும் மகிழ்வான நாள். வாக்கு வன்மையால் பயன்பெறும் வளமான நாள். நோக்கும் இடமெல்லாம் ஒளி மிக்க வழி தெரியும் முன்னேற்றமான நாள்.

**மீனம்:-** தாராளமாக இன்றி, பணப்புழக்கம் சுமாராக இருக்கும். வீடு மாற்றம், வேலை மாற்றங்கள் ஏற்படலாம். பெண்களால் விரயச் செலவுகள் அதிகரிக்கும். கோபத்தை அடக்குவது நலம் தரும்.





மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே பழனிச்சாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து, வடக்கு 3-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் ஜெ.மாணிக்கம் தலைமையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. முன்னிலையிலும் நடைபெற்ற கூட்டத்தில் மகளிர் அணி செயலாளர் பா. வளர்மதி சிறப்புரையாற்றினார். இதில் பொறுப்பாளர் ஆனி முத்து, மற்றும் வில்லாபுரம் ராஜா எம் எஸ் பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா. குமார், பேராசிரியர் ஜெயபால், ஆர். பாஸ்கரன், வி.பி.ஆர். செல்வகுமார், ஏ. பார்த்திபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பீகார் துணை முதல்வர் பெயரில் இரண்டு வாக்காளர் அட்டை

## தேஜஸ்வி யாதவ் குற்றச்சாட்டு



**பாட்னா, ஆக.11-**

பீகார் மாநில துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹா பெயரில் இரண்டு வாக்காளர் அடையாள அட்டை இருப்பதாக தேஜஸ்வி யாதவ் குற்றச்சாட்டு வைத்துள்ளார்.

நேற்று (ஆக.10) செய்தியாளர்களை அவர் சந்தித்தார். அப்போது துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹா பெயரில் உள்ள இரண்டு வாக்காளர் அட்டையை அவர் காண்பித்தார். அதில் விஜய் குமார் சின்ஹாவுக்கு பாட்னாவில் உள்ள பங்கிபூர் மற்றும் லக்கிஸராய் தொகுதியில் வாக்காளர் அட்டை இருப்பதாக தேஜஸ்வி யாதவ் குறிப்பிட்டார். இது தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கு பிறகு வெளியான வரைவு பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக அவர் குற்றச்சாட்டு வைத்துள்ளார்.

"தற்போது தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள வாக்காளர் வரைவு பட்டியலில் துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹாவின் பெயர் இரண்டு இடத்தில் இடம் பெற்றுள்ளது. இதனால்தான் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியே போலியானது என நாங்கள் சொல்லி வருகிறோம். துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹாவின் பெயர் வாக்காளர் பட்டியலில் இரண்டு முறை இடம்பெற்றது எப்படி? சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடியின் நிலை அதிகாரி அவரிடம் கையொப்பம் வாங்கினாரா? இதில் யார் மீது தவறு உள்ளது?

இந்த விவகாரத்தில் விஜய் குமார் சின்ஹா மீது தவறு இருந்தால் அவர் பதவி விலக வேண்டும். தேர்தல் ஆணையத்தின் பக்கம் தவறு இருந்தால் மாநில தேர்தல் ஆணையம் மன்னிப்பு கேட்க வேண்டும். பா.ஜ.க.வுக்கு உதவும் கருவியாக தேர்தல் ஆணையம் செயல்படக் கூடாது.

எனக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுத்த தேர்தல் ஆணையமும், மாவட்ட நிர்வாகமும், துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹாவுக்கு எதிராக அதே நடவடிக்கையை எடுக்குமா?" என தேஜஸ்வி யாதவ் கேள்வி எழுப்பியுள்ளார்.

### மீனவர்கள் சிறைபிடிப்பை கண்டித்து

# ராமேசுவரம் மீனவர்கள் இன்று முதல் காலவரையற்ற போராட்டம் அறிவிப்பு

**ராமநாதபுரம், ஆக.11-**

தமிழக மீனவர்களை சிறைபிடிக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட மீனவர்கள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

எல்லை கடந்து வந்து மீன் பிடித்தனர் என கூறி, ராமேசுவரம் மீனவர்கள் 8 பேரை இலங்கை கடற்படை நேற்று முன்தினம் கைது செய்தது. அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி போலீசார் சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் ராமேசுவரம் மீனவர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், ராமேசுவரம் அனைத்து மீனவர்கள் சங்க கூட்டம் ராமேசுவரம் மீன் பிடித்துறைமுகத்தில் நடைபெற்றது. அதில் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்த மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் உடனே விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்த நிகழ்வை கண்டித்து தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவும் மீனவர்கள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். மேலும், ஆகஸ்டு 13-ம் தேதி தங்கச்சிமடம் வலசை பேருந்து நிறுத்தம் அருகே மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவும், ஆகஸ்டு 19-ம் தேதி மாலை 3 மணி அளவில் ரெயில் மறியல் போராட்டம் நடத்தவும் மீனவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மேலும், ஆகஸ்டு 15-ம் தேதி சுதந்திர தினத்தன்று ராமேசுவரம் மீனவர்கள் உண்ணாவிரத போராட்டம் மேற்கொள்ள உள்ளனர். இலங்கை கடற்படையினரை கண்டித்து ராமேசுவரம் மீனவர்கள் நாளை முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்றும் அறிவித்துள்ளனர்.

# வாக்கு திருட்டு விவகாரம்: பிரச்சாரத்தில் இணைய மக்களுக்கு காங்கிரஸ் அழைப்பு

**புதுடெல்லி, ஆக.11-**

வாக்கு திருட்டு விவகாரம் தொடர்பான தங்களது பிரச்சாரத்தில் இணைய மக்களுக்கு காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ளது.

2024-ம் ஆண்டு மக்களவை தேர்தல் மற்றும் பல்வேறு மாநில தேர்தல்களில் 'வாக்கு திருட்டு' மோசடி நடந்துள்ளதாக அண்மையில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு வைத்தார்.

இந்நிலையில், தற்போது காங்கிரஸ் கட்சி இது தொடர்பாக இணையவழி பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. இதில் மக்கள் இணையவும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த இணையவழி பிரச்சாரத்தின் மூலம் வாக்கு திருட்டு சார்ந்து தேர்தல் ஆணையத்தின் விளக்கத்தை பெறவும் மற்றும் டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை வெளியிடவும் காங்கிரஸ் கட்சி வலியுறுத்துகிறது.

இது தொடர்பாக ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ளார். அதில், "வாக்கு திருட்டு விவகாரம், 'ஒரு நபர், ஒரு வாக்கு' என்று அடிப்படை ஜனநாயக உரிமைக்கு எதிராக உள்ளது. நியாயமான தேர்தல் முறைக்கு இது அவசியம். வெளிப்படைத்தன்மை மற்றும் டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை பொதுவெளியில் வெளியிட வேண்டும் என தேர்தல் ஆணையத்தை நாங்கள் கோருகிறோம். இதை மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தணிக்கை செய்ய முடியும். எங்களது இந்த கோரிக்கையில் இணைந்து தங்களது ஆதரவை வெளிப்படுத்துங்கள் என நான் கேட்டுக் கொள்கிறேன். votechori.in/ecdemand அல்லது 9650003420 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுத்து இதில் இணையலாம். இந்தப் போராட்டம் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கானது." என அந்த ட்வீட்டில் கூறியுள்ளார்.

# டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை வெளியிடுங்க: தேர்தல் ஆணையத்திற்கு ராகுல்காந்தி கோரிக்கை

**புதுடில்லி, ஆக. 11-**

தேர்தலை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்த வேண்டுமானால், டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தை காங்கிரஸ் எம்பி ராகுல் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2024 லோக்சபா தேர்தல் முதற்கொண்டு, அதன் பின் நடந்த மாநில சட்டசபை தேர்தல்களில் முறைகேடு நடந்திருப்பதாக காங்கிரஸ் எம்பி ராகுல் குற்றம்சாட்டினார். போலி வாக்காளர்கள், போலி முகவரி, ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள் என அடுக்கடுக்கான புகார்களை கூறி, ஆவணங்களை வெளியிட்டார். அவரது இந்தக் குற்றச்சாட்டு தேசிய அளவில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது குறித்து விளக்கம் அளித்த தேர்தல் ஆணையம், தனது குற்றச்சாட்டுகள் குறித்து பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் அல்லது பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறியுள்ளது.

இந்த நிலையில், தேர்தலை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்த வேண்டுமானால், டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என்று காங்கிரஸ் எம்பி ராகுல் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில்; ஓட்டு திருட்டு என்பது 'ஒரு நபர், ஒரு ஓட்டு' என்ற அடிப்படை ஜனநாயகக் கொள்கையின் மீதான தாக்குதலாகும். தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடக்க வேண்டுமானால், போலி வாக்காளர்கள் இல்லாத வாக்காளர் பட்டியல் அவசியம்.

டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை. அதனை பொது மக்களும், அரசியல் கட்சிகளும் ஆய்வு செய்யட்டும்.

votechori.in/ecdemand என்ற இணையதளத்தில் பதிவு செய்வதன் மூலமோ, 9650003420 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுப்பதன் மூலமாகவோ, எங்களின் இந்த கோரிக்கைக்கு ஆதரவு அளிக்கலாம்.

இது ஜனநாயகத்திற்கு எதிரான போராட்டம், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# மாணவர்கள் புத்தகங்களை பார்த்து தேர்வு எழுதலாம்

## புதிய திட்டத்துக்கு சி.பி.எஸ்.இ. ஒப்புதல்

**புதுடில்லி, ஆக.11-**

2026-27 கல்வியாண்டு முதல் 9ம் வகுப்பில் திறந்த புத்தக மதிப்பீடுகளை ஒருங்கிணைக்கும் புதிய திட்டத்துக்கு மத்திய இடைநிலை கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. ஒப்புதல் அளித்துள்ளது.

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் பாடத்திட்டம், தேர்வு முறைகளில் சி.பி.எஸ்.இ. பல்வேறு மாற்றங்களை கொண்டு வருகிறது. அதன் ஒரு கட்டமாக, 9ம் வகுப்பில் புத்தகங்களை பார்த்து தேர்வு எழுதும் வகையில் திறந்த புத்தக மதிப்பீடுகளை ஒருங்கிணைக்கும் புதிய திட்டத்துக்கு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

சி.பி.எஸ்.இ. புதிய நடைமுறையின் கீழ் ஒவ்வொரு பருவத்திலும் முக்கிய பாடங்களான மொழிப்பாடம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துத் தேர்வுகள் நடத்தப்படும். 2026-27 கல்வியாண்டில் 9ம் வகுப்பு மாணவர்கள் புத்தகங்களை பார்த்து தேர்வு எழுதும் திட்டம் செயல்பாட்டுக்கு வர உள்ளது. இதற்கான ஒப்புதலை சி.பி.எஸ்.இ. வாரியத்தில் முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் நிர்வாக குழு அளித்துள்ளது.

இத்திட்டம், திறன் அடிப்படையிலான கற்றல் மற்றும் அதனை ஊக்குவிப்பது, மனப்பாடம் செய்வதை குறைப்பது ஆகியவற்றை நோக்கமாக கொண்டது ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடகாவில் தேர்தல் முறைகேடு: விசாரிக்க சித்தராமையா உத்தரவு

**பெங்களூரு, ஆக.11-**

கர்நாடகாவில் தேர்தல் முறைகேட்டை விசாரிக்க சித்தராமையா உத்தரவிட்டுள்ளார்.

நடந்து முடிந்த கர்நாடகா, மாகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், அரியானா சட்டமன்றத் தேர்தல் மற்றும் மக்களவை தேர்தல்களில் தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வுடன் இணைந்து வாக்கு திருட்டில் ஈடுபட்டதாக ராகுல் காந்தி குற்றம்சாட்டினார்.

அவர் கூறியதாவது, "கர்நாடகாவில் 16 இடங்கள் கிடைக்கும் என்று எங்கள் உள் கணக்கெடுப்பு கணித்திருந்தது. ஆனால் எங்களுக்கு ஒன்பது இடங்கள் மட்டுமே கிடைத்தன. நாங்கள் 7 இடங்களில் ஏன் தோற்றோம் என்பதை ஆராய்ந்தோம். குறிப்பாக மகாதேவபுரா தொகுதியில் 1,00,250 வாக்குகள் ஐந்து வெவ்வேறு முறைகள் மூலம் திருடப்பட்டதாக அவர் கூறினார். இதில் போலி வாக்காளர்கள், போலி முகவரிகள் மற்றும் ஒரே முகவரியில் பல வாக்காளர்கள், புகைப்படம் இல்லாத வாக்காளர்கள், படிவம் 6 முறைகேடு செய்தல் ஆகியவை அடங்கும்" என்று தெரிவித்தார்.

இந்நிலையில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேட்டியளித்த கர்நாடக முதல்வர் சித்தராமையா, "மக்களவை தேர்தலில் வாக்கு திருட்டு தொடர்பான புகார்களை சட்டத்துறை விசாரிக்கும். அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணையை முடித்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க அட்வகேட் ஜெனரலுக்கு உத்தரவிடப்படும்" என்று கூறினார்.

# தமிழகத்தில் ஆக.16 வரை மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை, ஆக. 11-**

தமிழகத்தில் இன்று (ஆக.11) முதல் ஆக.16-ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று முதல் ஆகஸ்ட் 16ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் ஆகஸ்ட் 14ம் தேதி வரை சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பிளஸ் 1 வகுப்பு பொதுத் தேர்வு ரத்து ஏன்? அமைச்சர் விளக்கம்

**புதுக்கோட்டை, ஆக.11-**

கற்றல், கற்பித்தல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக, பிளஸ் 1 வகுப்பு பொதுத் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது என மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மாணவர்கள் மனப்பாடமின்றி புரிதலோடு தேர்வு எழுத வேண்டும். அறிவியல் சார்ந்து சிந்திக்க வேண்டும் என மாநில கல்விக் கொள்கையில் கூறப்பட்டுள்ளது. கற்றல், கற்பித்தல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக, பிளஸ் 1 வகுப்பு பொதுத்தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியாகவோ, கண்மூடித் தனமாகவோ மும்மொழிக் கொள்கை உள்ளிட்ட எதையும் எதிர்க்கவில்லை. மாணவர்களின் தேவையை அறிந்துதான் செய்கிறோம். தமிழக அரசு செய்துள்ள நல்லவற்றை மத்திய அரசும் எடுத்துக்கொள்ள வேண்டும். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் தமிழகத்துக்கு நிதி தருவேன் என்று மத்திய அரசு கூறுவது சரியல்ல.

3, 5, 8-ம் வகுப்புகளில் தேர்ச்சி பெறாவிட்டால், இடை நிற்றல் விகிதத்தை அதிகரிக்கும். அதனால்தான் 1 முதல் 8-ம் வகுப்பு வரை ஆல் பாஸ் என்று உள்ளது. அதிலும், எதையும் படிக்காமல் அடுத்த வகுப்புக்கு சென்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஒவ்வொரு வகுப்புக்கும் சர்வே எடுக்கப்படுகிறது." என்றார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# ஆப்பரேஷன் சிந்தூர் வித்தியாசமானது: ராணுவத் தலைமை தளபதி திவேதி



**சென்னை, ஆக.11-**

ஆப்பரேஷன் சிந்தூர் நமது வழக்கமான நடவடிக்கையை விட வித்தியாசமானது. நாங்கள் சதுரங்க நகர்வுகளைச் செய்து கொண்டிருந்தோம் என ராணுவத் தலைமை தளபதி உபேந்திர திவேதி தெரிவித்துள்ளார்.

சென்னை ஐ.ஐ.டி.யில் நடந்த நிகழ்ச்சியில், ராணுவத் தலைமைத் தளபதி உபேந்திர திவேதி பேசியதாவது: ஆப்பரேஷன் சிந்தூரில், நாங்கள் சதுரங்கம் விளையாடினோம். எதிரியின் அடுத்த நகர்வு என்னவாக இருக்கும், என்ன செய்யப் போகிறோம் என்பது எங்களுக்குத் தெரியாது. இது கிரே சோன் என்று அழைக்கப்படுகிறது. கிரே சோன் என்றால் நாம் வழக்கமான நடவடிக்கைகளுக்கு அல்ல.

நமது வழக்கமான நடவடிக்கையை விட வித்தியாசமானது. நாங்கள் சதுரங்க நகர்வுகளைச் செய்து கொண்டிருந்தோம். அவர்களும் (எதிரி) சதுரங்க நகர்வுகளைச் செய்து கொண்டிருந்தர். எங்கோ நாங்கள் அவர்களுக்கு செக்மேட்டைக் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை செயல்படுத்த பாதுகாப்பு படையினருக்கு மத்திய அரசு அதிகாரம் அளித்தது. ஏப்ரல் 22ம் தேதி அன்று பஹல்காமில் நடந்தது நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மறுநாளே, 23ம் தேதி, நாங்கள் அனைவரும் அமர்ந்தோம். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், 'எல்லாம் போதும் போதும்' என்று கூறியது இதுவே முதல் முறை. சுதந்திரமான முறையில் செயல்பட உத்தரவுகள் வழங்கப்பட்டன. என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.' அந்த வகையான நம்பிக்கை, அரசியல் தெளிவை நாங்கள் முதன்முறையாகக் கண்டோம். இவ்வாறு அவர் பேசினார்.

# இந்தியாவை யாராலும் தடுக்க முடியாது: ராஜ்நாத்சிங் உறுதி



**போபால், ஆக.11-**

'' உலகின் மிகப்பெரிய சக்தியாக இந்தியா மாறுவதை உலகின் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது,'' என மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ம.பி., மாநிலம் ரைசன் என்ற இடத்தில் நடந்த நிகழ்ச்சியில் ராஜ்நாத் சிங் பேசியதாவது: இந்தியா வேகமாக வளர்ச்சி பெறுவதை சிலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் அதனை விரும்பவில்லை. எப்படி இந்தியா வேகமாக முன்னேறலாம் என கேள்வி கேட்கின்றனர். இந்தியர்களின் கைகளால், இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களின் விலை, மற்ற நாடுகளில் தயாரிக்கப்படும் பொருட்களை விட அதிகமானதாக இருக்க வேண்டும் என பலர் முயற்சி செய்கின்றனர். இதனால், பொருட்கள் விலை உயர்ந்தால் அவற்றை உலக நாடுகள் வாங்காது என நினைக்கின்றனர். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆனால், இந்தியா வேகமாக முன்னேறுகிறது. உலகின் மிகப்பெரிய சக்தியாக இந்தியா மாறுவதை எந்த சக்தியும் தடுக்க முடியாது என்பதை உறுதியுடன் கூறுகிறேன். பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்து 24 நாடுகளுக்கு அனுப்பி வைக்கிறோம். இது தான் இந்தியாவின் பலம். அப்பாவி மக்களை பயங்கரவாதிகள் மதத்தை கேட்டு கொன்றனர். ஆனால், நாம் யாரின் மதத்தையும் கேட்காமல் கொல்வது என முடிவு செய்தோம். பயங்கரவாதிகள் செய்த செயலை பார்த்து நாம் அவர்களை கொன்றோம். இவ்வாறு அவர் பேசினார்.

### துணை ஜனாதிபதி தேர்தல்:

# பொது வேட்பாளரை நிறுத்த இண்டியா கூட்டணி திட்டம்

**டெல்லி, ஆக.11-**

அடுத்த மாதம் 9ம் தேதி துணை ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.;

நாட்டின் துணை ஜனாதிபதியாக இருந்த ஜக்தீப் தன்கர் கடந்த மாதம் 21ம் தேதி பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, அடுத்த மாதம் 9ம் தேதி துணை ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அன்றைய தினமே எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 7ம் தேதி தொடங்கிய நிலையில் வரும் 21ம் தேதி நிறைவடைகிறது. இதுவரை யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

இந்நிலையில், துணை ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த இண்டியா கூட்டணி திட்டமிட்டுள்ளது. இதற்காக இண்டியா கூட்டணியில் உள்ள கட்சிகளின் கருத்தை பெற காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே முடிவெடுத்துள்ளார். அதேவேளை, துணை ஜனாதிபதி வேட்பாளரை பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அறிவித்த பின்னர் காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணி வேட்பாளரை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசிய ஜனநாயக கூட்டணியில் மீண்டும் இணைய ஓ.பி.எஸ்.க்கு பா.ஜ.க. அழைப்பு

**சென்னை, ஆக.11-**

பா.ஜ.க. அழைப்பு காரணமாக ஓ.பன்னீர்செல்வம் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைகிறாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழகத்தில் ஆளும் தி.மு.க. கூட்டணி வலுவாக உள்ள நிலையில், பிரதான எதிர்கட்சியான அதி.மு.க.வும் வலுவான கூட்டணி அமைக்க முயற்சித்து வருகிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை கழற்றி விட்ட அ.தி.மு.க., சட்ட சபை தேர்தலுக்காக மீண்டும் பா.ஜ.க.வுடன் கை கோர்த்துள்ளது.

இதனால் ஏற்பட்ட பல்வேறு சூழல் காரணமாக பா.ஜ.க. கூட்டணியில் நீண்ட காலமாக அங்கம் வகித்து வந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த வாரம், பா.ஜனதா கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.தமிழகம் வந்த பிரதமர் மோடியை சந்திக்க ஓ.பன்னீர்செல்வம் நேரம் கேட்டிருந்த நிலையில் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. இதுவே அவர் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகுவதற்கான காரணமாக கருதப்பட்டது.

தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலினையும் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்தார். பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகிய நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினை ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசியதும், அவரது பேட்டியும் வலைத்தளங்களில் பல்வேறு யூகங்களை கிளப்பி விவாதமாக மாறியது.

இந்த நிலையில், பா.ஜ.க. தரப்பில் இருந்து ஓ.பன்னீர்செல்வத்திடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம், ஓ.பன்னீர்செல்வத்தை தொலைபேசி மூலம் தமிழக பா.ஜ.க. நிர்வாகிகள் தொடர்பு கொண்டு பேசினர். அப்போது, ஓ.பன்னீர்செல்வத்திடம், பா.ஜ.க. தேசிய பொதுச்செயலாளர் பி.எல்.சந்தோஷ் சென்னை வர உள்ளார். அவர் உங்களை சந்திக்க விருப்பப்படுகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஓ.பன்னீர்செல்வம், நான் எனது ஆதரவாளர்களுடன் பேசிய பிறகே இது குறித்து முடிவு செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. அழைப்பு காரணமாக ஓ.பன்னீர்செல்வம் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைகிறாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.


மரம்
மனிதனின்
உரம்

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



வரும் தேர்தலில், கூடுதல் தொகுதிகள் வாங்க வேண்டும் என்பதற்காக தி.மு.க.வையோ அல்லது தி.மு.க. தலைவரையோ திருமாவளவன் புகழ்ந்து பேசலாம். அதே சமயத்தில், மக்கள் செல்வாக்கு பெற்ற, சாதி மதங்களைக் கடந்த மறைந்த தலைவர்களை விமர்சிப்பது என்பது நாகரிகமற்ற செயல்.

**- ஓ பன்னீர் செல்வம்**



துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் அவர் பதவியை ராஜினாமா செய்ததிலிருந்து தற்போது வரை அவர் எங்கே இருக்கிறார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அவர் தனது அதிகாரப்பூர்வ இல்லத்திலும் இல்லை. அவரது அரசியல் நண்பர்களாலும் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ய வேண்டுமா?

**- கபில் சிபல்**



தேர்தல் முறைகேடு குற்றங்களுக்கு வாக்காளர் பட்டியல் ஆதாரமாக இருப்பதால் அதை டிஜிட்டல் வடிவத்தில் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறோம். ஒரு கோடி போலி வாக்காளர்கள் சட்டமன்றம் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் வாக்களித்துள்ளனர் என்ற கேள்விக்கு தேர்தல் ஆணையம் பதில் கூற வேண்டும்.

**- செல்வப்பெருந்தகை**



அரசு பள்ளிகளின் மாணவர்களை தனியார் பள்ளிகளுக்கு திருப்பி விடும் கொள்கையை தமிழக அரசு தயாரித்திருக்கிறது. அரசு பள்ளிகள் மேலும் சீரழியவே இது வழிவகுக்கும். தாய்மொழியை ஊக்குவிக்காத, தாய்மொழி வழிக்கல்வியை ஊக்குவிக்காத அனைத்துக் கொள்கைகளும் குப்பைகள் தான்.

**- அன்புமணி**

# திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ராசகோபாலசாமி அரசினர் கலைக்கல்லூரியில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணிநியமன ஆணை

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்



**திருவாரூர்,ஆக.11-**

திருவாரூர் மாவட்டம், மன்னை இராசகோபாலசாமி அரசினர் கலைக்கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு ஊரக, நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு தேர்வானவர்களுக்கு பணிநியமன ஆணைகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா வழங்கினார். கலெக்டர் வ.மோகனச்சந்திரன், உடனிருந்தார்.

இன்றை தினம் நடைபெற்ற இவ்வேலைவாய்ப்பு முகாமில், தொழில்துறை, சேவைத்துறை, விற்பனைத் துறைகளை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 101 தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இம்முகாமில் எட்;டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ, பி.இ, நர்சிங் படிப்புகள் போன்ற கல்வித்தகுதியுடைய 18 முதல் 35 வயதிற்குட்பட்ட வேலைநாடும் இளைஞர்கள் என 491 ஆண் வேலைநாடுபவர்களும், 1522 பெண் வேலைநாடுபவர்களும் என மொத்தம் 2013 நபர்கள் இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

இதில், 96 ஆண் வேலைநாடுபவர்கள்;, 217 பெண் வேலைநாடுபவர்கள் என மொத்தம் 313 நபர்கள் தேர்வு செய்யப்பட்டதில், 39 ஆண் வேலைநாடுபவர்;களும், 63 பெண் வேலைநாடுபவர்களும் என மொத்தம் 102 நபர்கள் முதற்கட்ட நிலைக்கு தேர்வாகியுள்ளனர்.

மேலும், மாவட்டத்தில் உள்ள திறன் பயிற்சி நிறவனங்கள் கலந்துகொண்டு இலவச திறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்துள்ளனர். மேலும், உயர்கல்வி, சுயவேலைவாய்ப்பு மற்றும் வங்கிகடன் குறித்து சம்மந்தப்பட்ட துறைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டு, வேலைநாடுபவர்கள், மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், திருச்சி மண்டல இணை இயக்குநர் அருணகிரி, மன்னார்குடி நகர் மன்றதலைவர்மன்னை.த.சோழராஜன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) பொன்னம்பலம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சந்திரசேகரன், மன்னார்குடி ராஜகோபாலசுவாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# திருச்சி கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து 11 பேருந்துகள்

## பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்




**திருச்சி,ஆக.11-**

திருச்சிராப்பள்ளி முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் (லிட்) திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் 7 தாழ்தள சொகுசுப் பேருந்துகள் மற்றும் 3 புறநகர் பேருந்துகள் மற்றும் 1 நகரப்பேருந்து என மொத்தம் 11 பேருந்துகளை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்து, தாழ்தள சொகுசுப் பேருந்துகளில் உள்ள வசதிகளை பார்வையிட்டார்.

மேற்கண்ட வழித்தடத்தில் இயங்கக்கூடிய புதிய 7 தாழ்தள சொகுசுப் பேருந்துகள், 3 புறநகரப் பேருந்துகள் மற்றும் 1 நகரப் பேருந்து உட்பட மொத்தம் 11 பேருந்துகளை (10.08.2025) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து வடுகப்பட்டி குமாரமங்கலம் வழியாக அயன்புத்தூர் வரை மற்றும் டி.வி.எஸ்.டோல்கேட் முதல் அரசு சட்டக்கல்லூரி திருவளர்ச்சிபட்டி பிரிவு சாலை வழியாக செல்லாயி அம்மன் கோவில் வரை செல்லும் 2 சிற்றுந்து பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில், கலெக்டர் வே.சரவணன் , மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன்,, நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக திருச்சிராப்பள்ளி மண்டல பொதுமேலாளர் சதீஸ்குமார், துணை மேலாளர்கள் சாமிநாதன், புகழேந்திராஜ், வட்டார போக்குவரத்து அலுவலர் நடராஜன், போக்குவரத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள்

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்



**புதுக்கோட்டை,ஆக.11-**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (09.08.2025) திறந்து வைத்தார்.

பின்னர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் ஊரகப் பகுதிகளுக்கு தேவையான, குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதி, மின் வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், மறவாமதுரை ஊராட்சி ஒன்றிய நடு நி லைப் பள் ளி யில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.35 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டடத்தினையும், நகரப்பட்டி ஊராட்சி, நகரப்பட்டி ஆலடி செல்வ விநாயகர் கோவில் குளத்திற்கு புதிதாகக் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவரினையும், நல்லூர் ஊராட்சி, நல்லூர் கிராமத்தில், ஒன்றிய பொதுநிதியின்கீழ் ரூ.6 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்கம் கட்டடத்தினையும் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய நலத் திட்டங்களை பொதுமக்கள், மாணாக்கர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, பொன்னமராவதி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆர்.பாலசுப்ரமணியன், பி.வெங்டேஷன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர்; கலந்துகொண்டனர்.

# நாகை நாடாளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் உயர்மட்ட பயணிகள் நிழற் குடை அமைக்கும் பணி தொடக்கம்



**நாகப்பட்டினம்,ஆக.11-**

நாகை மாவட்டம் திருமருகலில் பயணிகள் நிழற்குடை அமைக்க நேற்று பூஜை நடைபெற்றது. திருமருகல் சந்தைப்பேட்டை கடை தெருவில் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் சுமார் ரூ 40- லட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உயர் மட்ட பயணிகள் நிழலகம் அமைக்கும் பணிக்கு நேற்று பூஜை நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர்

என்.கௌதமன் நாகை பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சிக்கு திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ செங்குட்டுவன் முன்னிலை வகித்தார். இதில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன் சுப்பிரமணியன் (கிராம ஊராட்சி) பொறியாளர் ரவிச்சந்திரன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் ஒன்றிய செயலாளர் சந்திரசேகர் துணை செயலாளர் ரமேஷ் திமுக மாவட்ட பிரதிநிதிகள் ஜெயக்குமார், ஜெயபால், குமரன் ஒன்றிய துணை செயலாளர் அஞ்சா நெடுமாறன் அயலக அணியின் மாவட்ட துணை தலைவர் விஜய கணபதி மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் கார்த்திகேயன் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஜெயலட்சுமி மணிவண்ணன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் துணை அமைப்பாளர் செந்தில்நாதன்,ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் தலைவர் பால்ராஜ்

திருமருகல் வர்த்தக சங்கத் தலைவர் ஜெயபால சங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# திருக்கண்ணபுரம் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தின் கஞ்சி கலயம் எடுக்கும் விழா



**நாகப்பட்டினம்,ஆக.11-**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருக்கண்ணபுரத்தில் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தின் 12-ம் ஆண்டு ஆடிப்பூர கஞ்சி கலையம் எடுக்கும் விழா ஞாயிற்று கிழமை நடைபெற்றது. விழாவை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆழ்வார் மண்டபத்தில் இருந்து கஞ்சி கலயத்தை சுமந்து கொண்டு முக்கிய வீதி வழியாக மேளதாளம் முழங்க வருகை தந்தனர். பின்னர் வழிபாட்டு மன்றத்தில் கஞ்சி கலயம் வைத்து மழை வேண்டியும்,விவசாயம் செழிக்கவும்,மாணவ மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்கவும், நோயற்ற வாழ்வு வாழவும், சிறப்பு வழிபாடும்,அவரவர் தலையில் மண் பானையில் சுமந்து வந்த கஞ்சி கலையத்தை அம்மனுக்கு படைத்து தொடர்ந்து பாலாபிஷேகம் செய்தனர். இவ்விழாவில் மாலை அணிந்து விரதம் இருந்த சுற்று வட்டார பகுதிகளில் உள்ள திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மன்ற நிர்வாகிகள் செய்திருந்தனர். பின்னர் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# திருமருகல் அருகே போலகம் ஊராட்சியில் சிறப்பு பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம்



**நாகப்பட்டினம்,ஆக.11-**

நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஒன்றியம் போலகம் ஊராட்சியில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் சிறப்பு பொது விநியோகத்திட்ட மக்கள் குறைதீர் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் நாகப்பட்டினம் வட்ட வழங்க அலுவலர் ரகு தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்தார். இதில் முகவரி மாற்றம் செல் நம்பர் இணைப்பு, பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பம் செய்தல் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டது. இதில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பவுஜியா பேகம் அபுசாலி ஊராட்சி செயலாளர் நடராஜ் பொது விநியோகத் திட்ட வட்ட பொறியாளர் மணிகண்டன் இளநிலை வருவாய் ஆய்வாளர் இந்திரா, கிராம பணியாளர் குமார், விற்பனையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் உழவர் நல மையங்கள் அமைப்பதற்கு தகுதியானவர் விண்ணப்பிக்கலாம்

## கலெக்டர் ச.அருண்ராஜ் தகவல்

**பெரம்பலூர் ,ஆக.11-**

தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை அமைச்சர் வேளாண்மை நிதி நிலை அறிக்கை 2025 -2026 இல் மாநிலம் முழுவதும் 1000 உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உழவர் நல மையங்களை அமைப்பதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலான உழவர் நல சேவை மையம் அமைக்க 2 எண்களும், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலான உழவர் நல சேவை மையம் அமைக்க 1 எண் இலக்கும் பெறப்பட்டுள்ளது. மொத்த திட்ட மதிப்பீட்டில் 30 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

உழவர் நல சேவை மையம் அமைப்பதற்கான தகுதியான வயது வரம்பு 20 -45 வருடங்களுக்குள்ளும் மற்றும் கல்வி தகுதியான வேளாண்மை / தோட்டக்கலை / வேளாண் வணிகம் / வேளாண்பொறியியல் இதில் ஏதாவது ஒன்றில் பட்ட படிப்பு/ பட்டய படிப்பு பெற்றிருக்கவேண்டும். மேலும் அரசு நிறுவனத்தில் பணியில் இருத்தல் கூடாது. வங்கி மூலம் கடன் பெற்று தொழில் புரிவோர் நிறுவனத்தின் உரிமையானது தனியுரிமையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரார் கணினி திறன் பெற்றிருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருநபர் மட்டுமே நிதி உதவி பெற தகுதியுடையவராவார்.

விண்ணப்பிக்க 10 மற்றும் 12 ஆம் வகுப்பு சான்றிதழ், பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு சான்றிதழ்,ஆதார் அட்டை, குடும்ப அட்டை, சரக்கு மற்றும் சேவை வரி எண், நிரந்தர கணக்கு எண், வகுப்பு எண், பயனாளிகளின் வங்கி கணக்கு புத்தகம்,வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் ஒப்புதல் ஆவணம், மற்றும் விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். உழவர் நல சேவை மையம் அமைக்க தேவையான விதை விற்பனை உரிமம், உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்வதற்கான உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் வேளாண்மை சார்ந்த பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்த நபர்கள் ரூ.10 இலட்சம் அல்லது ரூ.20 இலட்சத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு வங்கியில் கடனுதவி பெற வேண்டும். வங்கி கடன் வழங்கிய உத்தரவு கடிதத்தினை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும். இத்திட்டத்தில் இணைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கவிரும்பும் மதிப்பீட்டுக்குஏற்றவாறு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்கூறியுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்ட தகுதியான நபர்கள் இத்திட்டத்தின் மூலம் உழவர் நல சேவை மையம் அமைப்பதற்கு விண்ணப்பித்து பயன்பெறலாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கரூரில் நகரமிய முகாம் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி சார்பில் நடைபெற்றது



**கரூர்,ஆக.11-**

திருச்சி பிஷப் ஹிபர் கல்லூரி மற்றும் கரூர் பயனுள்ள பாத்திரம் அறக்கட்டளையும் இணைந்து கரூரை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் நகரமிய முகாமை நடத்தியது. மக்கள் தங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை உணர்ந்து கொள்வதற்கு கல்வி அளித்தல் அர்த்தமுள்ள மற்றும் சமூகப் பொறுப்புள்ள வாழ்க்கையை நடத்தும் மனப்பாங்கை எழுப்புதல், சிறுபான்மையினரும் ,

புறக்கணிக்கப்பட்டவர்களும் தன்னம்பிக்கையுடன் வாழ வழி சேர்த்தல் உள்ளிட்ட நோக்கத்துடன் கல்லூரியின் சமூக பணித்துறையில் பயிலும் முதலாம் ஆண்டு முதுகலை சமூகப்பணி பயிலும் மாணவ மாணவிகள் மற்றும் கரூர் பயனுள்ள பாத்திரங்கள் அறக்கட்டளை இணைந்து இந்த நகரமிய முகாம் விழித்தெழு நிகழ்ச்சியை நடத்தியது. இந்த முகாம் கரூரில் ஆகஸ்ட் 4ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 8 ஆம் தேதி நிறைவு பெற்றது. அரசு காலனி பாலம்மாள்புரம், வடக்கு நெரூர், தெற்கு நெரூர், வேட்டைக்காரன்புதூர் உள்ளிட்ட இடங்களில் முகாம் நடைபெற்றது. வேட்டைக்காரன் புதூரில் நடைபெற்ற முகாமில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ரவி தாஸ் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றினார். கல்லூரியின் உதவி பேராசிரியர் மற்றும் தலைவர் சமூக பணித்துறை முனைவர் பிரேம் ராஜ் வாழ்த்துரை வழங்கினார்.

மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் உறுப்பினர் அருட்தந்தை கசிமிர் ராஜ், நரிக்குறவர் சமூக தலைவர் ஜெயபால் பயனுள்ள பாத்திரம் அறக்கட்டளை இயக்குனர் பிரபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் சுகாதாரம், குடி போதை தடுப்பு மற்றும் தலைமுறைகளுக்கு இடையேயான பிணைப்பு, குழந்தைகள் உரிமைகள் மற்றும் பெண்கள் மேம்பாடு கல்வியின் முக்கியத்துவம் உள்ளிட்ட தலைப்புகளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. முன்னதாக பல்வேறு மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முகாம் தலைவர் அஸ்வின் துணைத் தலைவர் சோஹில் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டனர். முனைவர் அருண்குமார், முனைவர் சாம்தேவா ஆசிர், முனைவர் ப்ளோரன்ஸ் ஷாலினி உள்ளிட்டவர்கள் முகாம் ஆலோசகர்களாக செயல்பட்டனர்.

# அரியலூரில் அகிலம் சாரிட்டபிள் டிரஸ்ட் உயிர்த்துளி ரத்தவங்கி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் ரத்ததானம் மற்றும் இலவச கண் சிகிச்சை முகாம்



**அரியலூர்,ஆக.11-**

அரியலூர் ராஜாஜி நகரில் உள்ள ஸ்ரீராம் ஹை டெக் பள்ளி வளாகத்தில், அகிலம் சாரிட்டபிள் டிரஸ்ட் ,உயிர்த்துளி இரத்தவங்கி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் இரத்ததானம் மற்றும் இலவச கண் சிகிச்சை முகாம் நேற்று நடை பெற் றது. மு கா மிற்கு வருகை தந்த அனைவரையும் அகிலம் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர் எழுத்தாளர்,சமூக ஆர்வலர் சோபனா பன்னீர் செல்வன் வரவேற்றார். ஸ்ரீ ராம் ஹை டெக் பள்ளி தாளாளர் இளவரசி பெரியசாமி,பள்ளியின் செயலாளர் பெரியசாமி,இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் மேனாள் தலைவர் நல்லப்பன்,மதிமுக மாவட்ட செயலாளர் க . இராமநாதன் முன்னிலை வகித்தனர்.அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு .சின்னப்பா நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று, இரத்தானமுகாமினை தொடக்கி வைத்து, தொடர்ந்து கண் சிகிச்சை முகாமினை பார்வையிட்டு பேசினார்.நிகழ்வில் குளோபல் ஓவர்சீஸ் எஜுகேஷன் தலைமை நிர்வாகி டாக்டர் லட்சுமி நாராயணன்,ரியோ குளோபல் ஓவர்சீஸ் நிர்வாகி சுரேஷ்குமார்,ஆதிரா கன்சல்டன்சி சர்வீசஸ் மேலாளர் அம்ஜத் கான் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். முகாமில் 54 நபர்கள் உயிர்த்துளி இரத்த வங்கி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மருத்துவர் பிரபாகரன் தலைமையிலான மருத்துவ குழுவினரிடம் இரத்ததானம் அளித்தனர்.தொடர்ந்து டாக்டர் அகர்வால் ஸ் கண் மருத்துவமனை மருத்துவ குழுவினர் சார்பில் 35 மேற்பட்டோருக்கு கண் பரிசோதனைசெய்யப்பட்டு,இலவசமாக கண் மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது.தொடர்ந்துஅகிலம் சாரிட்டபிள் டிரஸ்ட்

மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது . இந்நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பு பணிகள் அனைத்தும் ஆதிரா கன்சல்டன்சி நிறுவனர் ஜெசிமா அம்ஜத்கான் சிறப்பாக செய்திருந்தார். முடிவில், நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் அகிலம் சாரிட்டபிள் டிரஸ்ட் நிர்வாகியும் , யோகா பயிற்றுநர் ஹரிபிரசாத் நன்றி கூறினார்.

# தமிழகத்தில் 19,425 லிட்டர் எரிசாராயம் பறிமுதல்: அமலாக்கப் பிரிவு புலனாய்வு துறை நடவடிக்கை

**சென்னை,ஆக.11**

அமலாக்கப் பிரிவு புலனாய்வு துறை தமிழகம் முழுவதும் சட்ட விரோத மதுபான வர்த்தகத்தை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அமலக்கப்பிரிவு புலனாய்வு துறை தமிழகத்தில் போலி மதுபான வர்த்தகத்தை கட்டுப்படுத்த தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தை மிகவும் உறுதியாக அமல்படுத்தி வருகிறது. முதன்மையாக போலி மதுபானம் தயாரிக்கும் கூடங்கள், எரிசாராயம் கடத்தல்கள், சட்ட விரோதமாக மதுபானம் தயாரிக்கும் கூடங்கள், பிற மாநில மதுபானங்கள் கடத்தல்களை தடுக்க தொடர் கண்காணிப்பு மற்றும் வேட்டைகள் நடத்தி வருகிறது.

இன்று(08.08.2025, கோயம்புத்தூர் மண்டலம், மத்திய நுண்ணறிவுப் பிரிவு ஆய்வாளர் மற்றும் அவரது குழுவும் சேலம் மாவட்டம், கமலாபுரம் விமான நிலைய சந்திப்பின் அருகே வாகன சோதனையில் ஈடுபட்ட போது, ஒரு டாரஸ் லாரியை சோதனையிட்டதில் 555 கேன்களில் (ஒவ்வொன்றும் 35 லிட்டர்) மொத்தம் 19,425 லிட்டர் எரிசாராயம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. டாரஸ் லாரி மற்றும் விற்பனைக்குத் தடை செய்யப்பட்ட எரிசாராயம் பறிமுதல் செய்யப்பட்டன. இதில் தொடர்புடைய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், A1 (முக்கிய குற்றவாளி) மற்றும் A2 (லாரி ஓட்டுநர்) ஆகியோர் கர்நாடக மாநிலம் முதோலில் இருந்து தமிழகம் வழியாககேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்திற்குலாரி மூலம் எரிசாராயம் கடத்திவரப்பட்டது. இதனை கள்ளில் (toddy) கலந்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக சேலம் மாவட்டம் ஸ்டேஷ் பிளாண்ட் அமலாக்கப்பிரிவு காவல்நிலையத்தில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது.

பொது மக்கள் சட்டவிரோத மதுபான வர்த்தக தொடர்பான தகவல்களை தொலை தொடர்பு நிலை இலவச எண் 10581 அல்லது CUG எண் 9498410581 என்ற எண்ணிற்கு தகவல் வழங்கலாம். வழங்கப்படும் அனைத்து தகவல்களும் முழுமையாக ரகசியமாக பாதுகாக்கப்படும்.

# தமிழக முதல்வரால் ரூ.115 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

**சென்னை,ஆக.11**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியில், "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பிறகு கு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:- கடந்த 02.08.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் மகத்தான திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டம் தமிழ்நாடு மக்களிடையே மிகப் பெரிய அளவிலான வரவேற்பு பெருகி வருகிறது. கடந்த வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மைலாப்பூரில் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அன்று தொடங்கப்பட்ட ஒரே நாளில் 38 மாவட்டங்களில் 38 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது. இன்றைக்கு 2வது சனிக்கிழமை என்கின்ற வகையில் 36 இடங்களில் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. சென்னை, ஊட்டி நீங்கலாக 36 மாவட்டங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டம் நடைபெற்று வருகிறது. ஒவ்வொருக்கும் முழு உடற் பரிசோதனைகள் என்கின்ற வகையில் அவரவர் இருக்கின்ற இடங்களுக்கே தேடிச் சென்று முழு உடற் பரிசோதனைகள் செய்யும் மகத்தான திட்டமாக இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தைப் பொறுத்த வரை முதலமைச்சர் அவர்கள் ஆறு மாத காலத்திற்குள் தமிழ்நாடு முழுவதும் 1256 இடங்களில் நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். தமிழ்நாட்டில் உள்ள 388 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 3 என்கின்ற வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 என்கின்ற வகையிலும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகைகளிலும் 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகையில் முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. முதலமைச்சர் நோயாளர்களை மருத்துவ பயனாளிகள் என்று அழைக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் கடந்த வாரம் 44,418 பேர் மருத்துவ பயன் பெற்றிருக்கிறார்கள். 2வது வாரமாக இன்று காலை 09 மணி தொடங்கி இந்த முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சற்று நேரத்திற்கு முன்னர் வரை நடைபெற்றுக் கொண்டிருக்கும் 36 முகாம்களில் பதிவு செய்து பயன்பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 35,576 பேர். இந்த முகாம் மாலை 04 மணி வரை நடைபெறவிருக்கிறது.



இந்த முகாம் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கிறது. ஒவ்வொரு முகாமிலும் ஆயிரக்கணக்கானோர் முழு உடற் பரிசோதனை செய்துக் கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கான மருத்துவ சேவைகள் உடனடியாக வழங்கப்பட்டு அவர்களது உடல் நலன் குறித்து மருத்துவ அறிக்கை கோப்புகளுடன் உடனே வழங்கப்பட்டு அவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் நோய் பாதிப்புகளுக்கு இந்த மருத்துவ அறிக்கை பயன்பெறும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.110 கோடி மதிப்பிலான செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கட்டிடம் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் ஆக மொத்தம் ரூ.115 கோடி மதிப்பீட்டில் மாவட்ட தலைமை மருத்துவமனை இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பல்லாவரத்தில் இருந்த வட்டார அரசு மருத்துவமனையில் ரூ.7.75 கோடி மதிப்பீட்டில் பல மருத்துவமனை திறந்து வைக்கப்படவிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 3 இடங்களில் கட்டப்பட்டு இருக்கின்ற துணை சுகாதார நிலையங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்.வரலட்சுமி மதுசூதனன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பிரியா, இணை இயக்குநர் மரு.செந்தில்குமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பானுமதி அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வடபழனி பகுதியில் வீட்டு உரிமையாளர் தங்க நகைகளை திருடிய பெண் கைது

**சென்னை ஆக 11-**

சென்னை, வடபழனி, திருநகர் 2வது தெருவில் விவேக், என்பவர் வசித்து வருகிறார். இவரது வீட்டின் சாவி கடந்த ஜுன் மாதம் தொலைந்துவிட்ட நிலையில், கடந்த 05. ந் தேதி அன்று வரலட்சுமி பூஜைக்காக வீட்டின் பீரோவில் வைத்திருந்த தங்க நகைகளை பார்த்தபோது, அதில் சுமார் 28 கிராம் எடை கொண்ட தங்க கம்மல், மோதிரம், பிரேஸ்லேட் உள்ளிட்ட தங்க நகைகள், ஒரு ஜோடி வெள்ளி கொலுசு மற்றும் பணம் ரூ.10,000/- ஆகியவை திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து வீட்டு உரிமையாளர் விவேக், வடபழனி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.வடபழனி காவல் நிலைய குற்றப் பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, புகார்தாரரின் வீட்டினருகில் பொருத்தியிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததில். புகார்தாரரின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வரும் தேவிகலா என்பவர், புகார்தாரரின் வீட்டு சாவியை திருடி வைத்துக் கொண்டு, அவர்கள் வீட்டை பூட்டிவிட்டு வெளியே செல்லும் சமயங்களில் வீட்டை திறந்து தங்கநகைகள் மற்றும் பணத்தை திருடியது தெரியவந்தது. அதன்பேரில், எதிரி தேவிகலா, என்பவரை காவல் குழுவினர் கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 26 கிராம் எடை கொண்ட மோதிரம், கம்மல், பிரேஸ்லேட், தாலி உருப்படி உள்ளிட்ட தங்க நகைகள் மீட்கப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரி தேவிகலா விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# கொடுங்கையூர் மற்றும் வியாசர்பாடி பகுதியில் குட்கா, மாவா புகையிலை பொருட்கள் விற்ற 4 பேர் கைது

**சென்னை ஆக 11-**

கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் கடந்த 08.ந் தேதி அன்று, கொடுங்கையூர், திருவள்ளுவர் சாலையிலுள் ஒரு வீட்டை கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக குட்கா மற்றும் மாவா புகையிலை பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த கோமதி, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 80 கிராம் மாவா, 300 கிராம் ஹான்ஸ் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி கோமதி மீது ஏற்கனவே குட்கா விற்பனை செய்தது தொடர்பாக ஒரு வழக்கு உள்ளது தெரியவந்தது.

கொடுங்கையூர் காவல் குழுவினர் தொடர்ந்து, 08. ந் தேதி அன்று மதியம், கொடுங்கையூர், கிருஷ்ணமூர்த்தி சாலையில் சட்டவிரோத விற்பனைக்காக குட்கா புகையிலை பாக்கெட்டுகள் வைத்திருந்த குருமூர்த்தி, கொடுங்கையூர், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 670 கிராம் எடை கொண்ட ஹான்ஸ், கூலிப், விமல் குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் கடந்த 08. ந் தேதி அன்று, காலை, வியாசர்பாடி, ஏ. கல்யாணபுரம், 12வது பிளாக் அருகே சட்டவிரோதமாக குட்கா மற்றும் கஞ்சா பதுக்கி வைத்து விற்பனை செய்த விக்னேஷ் (எ) மலாய் விக்கி, ஏ. கல்யாணபுரம், வியாசர்பாடி மற்றும் கோமதி, ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 50 கிராம் எடை கொண்ட கூலிப் குட்கா பாக்கெட்டுகள் மற்றும் 300 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி விக்னேஷ் மீது ஏற்கனவே 4 குற்ற வழக்குகளும், கோமதி மீது ஒரு குட்கா வழக்கும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் வி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஆழ்வார்பேட்டையில் மழைநீர் வடிகால் பணி காரணமாக போக்குவரத்து மாற்றம்

**சென்னை ஆக 11-**

சென்னை ஆழ்வார்பேட்டையில் மழைநீர் வடிகால் பணி காரணமாக இன்று முதல் போக்குவரத்து மாற்றம் செய்துள்ளனர். ஆழ்வார்பேட்டை மேம்பாலத்தில் இருசக்கர வாகனங்கள், நான்குசக்கர வாகனங்கள் மட்டுமே செல்ல அனுமதி. மியூசிக் அகடாமி, மயிலாப்பூர், ஆழ்வார்பேட்டை நோக்கி வரும் மாநகரப் பேருந்துகளின் வழித்தடங்களில் மாற்றம் செய்துள்ளனர்.

# திருவொற்றியூரில் வெல்டிங் கடைகாரரர் மீது தாக்குதல்: ஒருவர் கைது

**சென்னை ஆக 11-**

சென்னை, திருவொற்றியூர், ஏகவள்ளியம்மன் கோயில் தெருவில் வசித்து வரும் பார்த்திபன், என்பவர் வெல்டிங் வேலை செய்து வருகிறார்.

**தாக்குதல்**

இவர் கடந்த 7. ந் தேதி அன்று இரவு திருவொற்றியூர் ஈசானி முத்து கோயில் 3வது தெருவில் நடந்து சென்ற போது, அங்கு அறிமுகமான 3 பேரை சண்டைபோட்டு கொண்டு பார்த்திபன் மீது சாய்ந்ததில் நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார். பாதிக்கப்பட்ட பார்த்திபன் அவர்களை சத்தம் போட, கோபமடைந்த மூவரும் மேற்படி பார்த்திபனை கை மற்றும் கட்டையால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

இரத்த காயமடைந்த பார்த்திபன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இது குறித்து கொடுத்த புகாரின் பேரில் திருவொற்றியூர் காவல் நிலையத்தில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட விஜேந்திரன், என்பவரை கைது செய்தனர். மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற 2 தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தேடிவருகின்றனர்.

**கைது**

விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட விஜேந்திரன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# வடசென்னையில் காவல்துறை சார்பாக போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம்

**சென்னை ஆக 11-**

சென்னை பெருநகர காவல்துறை சார்பாக போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம். அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி, மாணவ, மாணவியர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின்பேரில் தண்டையார்பேட்டை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், அரசு பல்வகை தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் சென்னை பெருநகர காவல்துறை சார்பாக போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வடக்கு மண்டல மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் அதிகாரிகள் மாணவர்களுக்கு போதை பொருட்களால் ஏற்படும் தீமைகளை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். போதை பொருட்கள் நடமாட்டம் குறித்து மாணவர்களுக்கு தகவல் ஏதேனும் கிடைக்கப்பெற்றால். உடனடியாக காவல்துறையினரிடமோ, கல்லூரி பேராசிரியர்களிடமோ தகவல் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. இரகசியம் பாதுகாக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, கல்லூரி முதல்வர், துணை முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் சுமார் 400 மாணவ, மாணவிகள், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், போதை பொருட்களுக்கு எதிரான இளைஞர் குழு உறுப்பினர்கள் பேரார்வத்தோடு பங்கேற்றனர். மாணவர்களிடம் போதை பொருட்களால் ஏற்படும் பாதிப்புகளையும், சமுகத்தில் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகள் குறித்தும் பயன்பாடுகளை தவிர்ப்பது குறித்தும் விளக்கமளித்து, மாணவ மாணவியர்கள் வருங்காலத்தில் போதை பொருட்கள் இல்லாத சமுகத்திற்கு பிரிதிநிதியாக மாறுவதற்கு காவல் அதிகாரிகள் அறிவுரை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட மாணவ மாணவிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் "SAY NO TO DRUGS" என்ற உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் உள்ளிட்ட பேராசிரியர்கள் மாணவ, மாணவியர்கள் காவல் துறை அதிகாரிகள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சென்னை, ஜார்ஜ் டவுன், பாரதி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 57வது பட்டமளிப்பு விழாவில்,அமைச்சர்கள்.பி.கே.சேகர்பாபு கோவி.செழியன் ஆகியோர் 60 மாணவிகளுக்கு பதக்கங்கள் மற்றும் பட்டங்களையும், 1312 மாணவிகளுக்கு பட்டங்களையும் வழங்கினர்.

# ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் மருத்துவரின் செல்போனை திருடிய இருவர் கைது

**சென்னை ஆக 11-**

சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் மருத்துவர் ஷியாம்சுந்தர், என்பவர் கடந்த 21. ந் தேதி அன்று மருத்துவமனையில் இரவு பணியிலிருந்த போது, கடந்த 22. ந் தேதி அன்று அதிகாலை, டவர் 1-ல் உள்ள மருத்துவர்கள் ஓய்வு அறையில் தூங்கிவிட்டு சிறிது நேரம் கழித்து எழுந்து பார்த்தபோது, அவரது ரெட்மி செல்போனை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து மருத்துவர் ஷியாம்சுந்தர், இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.இராஜீவ்காந்தி அரசு பொதுமருத்துவமனை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தின் அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், மருத்துவரின் செல்போனை திருடிச் சென்ற எதிரி முகமதுஜாவித், என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி முகமது ஜாவித் அரசு மருத்துவமனைகளில் நோட்டமிட்டு பயணிகள் மற்றும் மருத்துவ ஊழியர்களின் செல்போன்களை திருடி, திருவல்லிக்கேணி பகுதியில் தங்கி வரும் மெபூஅலாம் என்பவரிடம் விற்று பணம் பெற்றுச் சென்றதும் தெரியவந்தது. அதன்பேரில், திருட்டு செல்போன்களை குறைந்த விலைக்கு வாங்கிய எதிரி மெபூ அலாம், என்பவரை கைது செய்தனர். இவரிடமிருந்து புகார்தாரின் ரெட்மீ செல்போன் உட்பட மொத்தம் 4 செல்போன்கள் மீட்கப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு, சென்னை மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள்: தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம் நேரில் பார்வையிட்டு ஆய்வு

**சென்னை,ஆக.11**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியம் ஆகியவற்றின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமூடியகால்வாய் அமைக்கும் பணி, கால்வாய் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள், குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல், புதிய குளங்களில் நீர் கொள்ளளவினை அதிகரித்தல் மற்றும் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.08.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீர்வளத்துறை

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தை தணிப்பதற்காக தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயிலிருந்து கடல் வரை நேரடியாக ரூபாய் 91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமூடிய கால்வாய் அமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு பக்கிங்காம் கால்வாயிலிருந்து கடல் வரை மேற்கொள்ளப்படும் நேரடி பெருமூடிய கால்வாய் அமைக்கும் பணியின் மூலம் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து வெளியேறும் வெள்ள நீர் அதிகரிப்பதுடன் சதுப்பு நிலத்தின் வெள்ள அளவான (+) 3.750 மீட்டரிலிருந்து (+) 3.000 மீட்டருக்கு குறைப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மேலும், கடந்த காலங்களில் வேளச்சேரி விஜயநகர், ராம்நகர், பள்ளிக்கரணை, செம்மஞ்சேரி, நாராயணபுரம் மற்றும் பெரும்பாக்கம் பகுதிகளில் பெய்த மழைநீரால் ஏற்படும் வெள்ளப் பாதிப்பினால் மழைநீர் வடிய குறைந்தபட்சம் 2 அல்லது 3 நாட்கள் வரை ஆகும். தற்போது இத்திட்டம் செயல்பாட்டிற்கு வருவதால், தென்சென்னை பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு குறையும்.

இதனைத் தொடர்ந்து, சோழிங்கநல்லூர் மண்டலம், ஒக்கியம் மடுவில் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் விரிவான மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பள்ளிக்கரணை சதுப்புநிலம் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு திசைகளில் அமைந்துள்ள 62 குளங்களிலிருந்து தண்ணீரைப் பெறுகிறது. இது இறுதியில் ஒக்கியம் மடுவு வழியாக பக்கிங்காம் கால்வாயில் பாய்ந்து முட்டுக்காடு ஓடை வழியாக வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தற்போது இந்த ஒக்கியம் மடுவில் இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்வதுடன், நகர்ப்புற வெள்ளத்தைத் தடுக்க 800 மீட்டர் நீளத்தில் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பின்னர், பெருங்குடி மண்டலம், பள்ளிக்கரணை அணை ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை ரூபாய் 57.70 கோடி மதிப்பீட்டில் மூடிய பெருவடிகால்கள் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இப்பணி மேற்கொள்ளப்படுவதனால், பள்ளிக்கரணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள செட்டிநாடு என்கிளேவ், ராஜேஷ் நகர், விடுதலை நகர் ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு தவிர்க்கப்படும்.

இதனைத் தொடர்ந்து, பெருங்குடி மண்டலம், நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை ரூ.44 கோடி மதிப்பீட்டில் இரண்டு கண் கொண்ட கூடுதல் பெருவடிகால்வாய் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டத்தில் பக்கிங்காம் கால்வாயில் சேரும் கீழ்க்கட்டளை உபரி கால்வாயில் இரண்டு பகுதிகளாக ரூ.59.12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **SARDHAR NAINA MOHAMED S S/o. Sheik Dawood, Date of Birth : 29.04.2001, Permanently Residing at : D.No. 182, North Street, Ammappattinam, Manamelkudi Taluk, Pudukkottai District, Tamilnadu - 614 617.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**SARDHAR NAINA MOHAMED S**

**சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.**
**ஒ.மு.அ 2/1186/2025**

விஸ்வலிங்கம்,
த/பெ.ராமகிருஷ்ணன்,
27ஏ, குடித் தெரு, கோவக்குளம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதார் விஸ்வலிங்கம் என்பவர் தனது தாயார் "சரஸ்வதி" என்பவர் மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் 21.07.2018 அன்று இறந்தார் என்று கூறி இறப்பு சான்றிதழ் வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் 7 தினங்களுக்குள் தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**விஸ்வலிங்கம்,**
**மனுதாரர், கிருஷ்ணராயபுரம்.**

**சார்பு நீதிமன்றம், வேடசந்தூர்.**
I.A.No.1/2024
A.S.No.12/2024

பழனியம்மாள் மற்றும் ஒருவர்
...மனுதார்கள்/அப்பீல் வாதிகள்
கோடாங்கி மற்றும் 3 நபர்கள்
..... எதிர்மனுதார்கள்/அப்பீல் பிரதிவாதிகள்

1) மகேஷ்வரி, த/பெ.லேட்.குமரன், க./பெ. சரவணன், அம்பலக்காரத் தெரு,வளநாடு அஞ்சல், பாலக்குறிச்சி வழி, மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டம்.
2) முனியம்மாள், த/பெ.லேட்.குமரன் சோமரசன்பேட்டை, தாயனூர் அஞ்சல், பள்ளக்காட்டு வழி, திருச்சி மாவட்டம்-620 102.
..... புரோ 7 மற்றும் 9 அப்பீல் பிரதிவாதிகள்

பொது அறிவிப்பு

அப்பீல் வாதிகளால் சமூகம் நீதிமன்றத்தில் அப்பீல் பிரதிவாதிகளுக்கு எதிராக அப்பீல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்பீல் வழக்கில் வாரிசு மனு I.A.No.1/2024ல் 7 மற்றும் 9 புரோ எதிர்மனுதார்கள் / 7 மற்றும் 9 புரோ அப்பீல் பிரதிவாதிகளாக தங்களை சேர்க்க மனுச்செய்து தாங்கள் ஆஜராக வருகின்ற 20.08.2025ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அதனால், தாங்கள் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும், தவறும்பட்சம் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

S.செல்வக்குமார் B.A.,B.L.,
வழக்கறிஞர்,
திண்டுக்கல்.

## ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப்:

# இந்தியாவின் ரமேஷ் புதிஹால் வெண்கலம் வென்று சாதனை




**மாமல்லபுரம், ஆக.11-**

ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப் போட்டி ஆடவர் ஓபன் பிரிவில் இந்தியாவின் ரமேஷ் புதிஹால் வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளார் .

**ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப்...**

ஆசிய சர்பிங் கூட்டமைப்பு சார்பில் ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப் போட்டி மாமல்லபுரம் கடற்கரை பகுதியில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஓபன் பிரிவில் இந்தியாவின் ரமேஷ் புதிஹால் வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளார். இந்த போட்டியின் 6-வது நாளான நேற்று முன்தினம் ஆடவர் ஓபன் கால் இறுதி சுற்று ஹீட் 1-ல் இந்தியாவின் ரமேஷ் புதிஹால் 14.84 புள்ளிகளை குவித்து முதலிடம் பிடித்து அசத்தினார்.

**முதல் இந்திய வீரர்...**

அரை இறுதியில் ரமேஷ் புதிஹால் ஹீட் 1-ல் 11.43 புள்ளிகளுடன் 2-வது இடம் பிடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப் இறுதி போட்டிக்கு முன்னேறிய முதல் இந்திய சர்ஃபர் என்ற பெருமையை பெற்றார்.

**வெண்கலம்...**

இறுதிப் போட்டி நேற்று காலை நடைபெற்றது. இதில் ரமேஷ் புதிஹால் 12.60 புள்ளிகளை பெற்று வெண்கலம் வென்றார். இந்த பிரிவில் முதல் இரண்டு இடங்களை தென் கொரியாவின் கனோவா ஹீஜே (15.17), இந்தோனேசியாவின் பஜார் அரியானா (14.57) ஆகியோர் பிடித்தனர்.

# தன்னம்பிக்கையை அதிகரித்த காம்பீரின் வார்த்தைகள்

## சஞ்சு சாம்சன் நெகிழ்ச்சி

**மும்பை, ஆக.11-**

தான் மனச்சோர்வுடன் இருந்தபோது காம்பீரின் வார்த்தைகள் தன்னம்பிக்கையை அதிகமாக்கியது என்று சஞ்சு சாம்சன் தெரிவித்தார்

**விக்கெட் கீப்பர்...**

இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான சஞ்சு சாம்சன், இந்திய அணிக்காக அறிமுகமாகி 9 ஆண்டுகள் ஆகியிருந்தாலும் இதுவரை அவர் 50 சர்வதேச போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். சிறப்பான திறமை இருந்தும் அவருக்கு தொடர்ந்து வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்று பேசப்பட்டு வந்த வேளையில் தற்போது அவருக்கு அதிக வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன.

**2 முறை டக் அவுட்...**

இந்நிலையில், பயிற்சியாளர் கவுதம் காம்பீர் குறித்து பேசிய சஞ்சு சாம்சன், "நான் தொடர்ந்து இரண்டு போட்டிகளில் டக் அவுட்டான பிறகு, டிரஸ்ஸிங் ரூமில் நான் மனச்சோர்வுடன் அமர்ந்திருந்தேன். அதைக் கவனித்த கவுதம் காம்பீர், என்ன நடந்தது? என்று கேட்டார்.

**தன்னம்பிக்கை...**


நான் அவரிடம் இரண்டு வாய்ப்புகள் கிடைத்தன, ஆனால் இரண்டிலும் ரன் அடிக்காமல் கோட்டைவிட்டுவிட்டேன் என்று கூறினேன் அதற்கு அவர், 'அதனால் என்ன? நீங்கள் 21 முறை டக்-அவுட்டானால் மட்டும் தான் நான் உங்களை அணியிலிருந்து நீக்குவேன்' என்று கூறினார். அவரின் வார்த்தைகள் என் தன்னம்பிக்கையை அதிகமாக்கியது" என்று தெரிவித்தார்.

# ஆஸி.க்கு தொடருக்குப் பின் ரோகித் சர்மா, கோலி ஓய்வு?

## முன்னாள் வீரர் சவுரவ் கங்குலி பதில்

**கொல்கத்தா, ஆக.11-**

இந்திய அணியின் மூத்த வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலி பேசியுள்ளார்.




**ரோகித், கோலி ஓய்வு...**

இந்திய அணியின் மூத்த வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் கடந்த ஆண்டு டி20 உலகக் கோப்பை வெற்றிக்குப் பிறகு, சர்வதேச டி20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றனர். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்பாக, யாரும் எதிர்பாராத விதமாக இருவரும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர்.

**தொடர்ந்து விளையாட....**

டி20 மற்றும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும், அவர்கள் இந்திய அணிக்காக தொடர்ந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளனர். ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் ஒருநாள் வடிவிலான போட்டிகளில் மிகவும் சிறப்பான சாதனைகள் படைத்திருப்பதாகவும், சிறப்பாக விளையாடும் வரை அவர்கள் தொடர்ந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடலாம் என உணர்வதாகவும் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

**மிகவும் கடினம்...**

இது தொடர்பாக நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது: ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்குப் பிறகு மூத்த வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் ஓய்வு பெறப்போகிறார்களா என்பது எனக்குத் தெரியாது. அதனால், அந்த விஷயத்தில் என்னால் எதுவும் கூற முடியாது. அவர்கள் ஓய்வு பெறுவார்களா? மாட்டார்களா? எனக் கூறுவது மிகவும் கடினம்.

**நம்பமுடியாத அளவுக்கு...**

நன்றாக விளையாடுபவர்கள் அணிக்காக தொடர்ந்து விளையாடுவார்கள். ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி நன்றாக விளையாடினால், அவர்கள் தொடர்ந்து விளையாட வேண்டும். ஒருநாள் போட்டிகளில் இருவரும் நம்பமுடியாத அளவுக்கு சிறப்பான சாதனைகளைப் படைத்துள்ளனர் என்றார். இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான ஒருநாள் தொடர் வருகிற அக்டோபர் 19 முதல் தொடங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மிகுந்த நம்பிக்கையுடன் செயல்பட்ட முகமது சிராஜ்; மனம் திறந்த ஆகாஷ்

**மும்பை, ஆக.11-**

ஓவல் டெஸ்ட்டில் வெற்றி பெறுவோமா என்பது உறுதியாக தெரியாதபோதும் முகமது சிராஜ் மிகுந்த நம்பிக்கையுடன் செயல்பட்டார் என்றார்.

**ஆண்டர்சன் - டெண்டுல்கர் டிராபி...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஐந்து போட்டிகள் கொண்ட ஆண்டர்சன் - டெண்டுல்கர் டிராபி டெஸ்ட் தொடர் அண்மையில் நிறைவடைந்தது. ஓவலில் நடைபெற்ற கடைசிப் போட்டியில் 6 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி இந்திய அணி த்ரில் வெற்றி பெற்றது. தொடரையும் 2-2 என்ற கணக்கில் சமன் செய்தது.

**அர்ப்பணிப்புடன்...**

இந்த நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட்டில் வெற்றி பெறுவோம் என முகமது சிராஜ் தொடர்ந்து நம்பிக்கையளித்ததாக வேகப் பந்துவீச்சாளர் ஆகாஷ் தீப் பேசியுள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: அணிக்காக தொடர்ச்சியாக ஐந்து போட்டிகளில் மிகுந்த அர்ப்பணிப்புடன் விளையாடிய முகமது சிராஜை உண்மையில் கண்டிப்பாக பாராட்டியாக வேண்டும். அணிக்காக அவர் எவ்வளவு கடினமாக உழைத்தார் என்பதை நாம் அனைவரும் பார்த்தோம். ஓவல் டெஸ்ட்டில் வெற்றி பெற்ற தன் பின்னணியில் கடுமையான உழைப்பு இருக்கிறது.

**நம்பிக்கை...**

ஓவல் டெஸ்ட்டில் முகமது சிராஜ் அவரது மிகச் சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தியதாகக் கூறமாட்டேன். அவர் பல போட்டிகளில் விளையாடியதை நான் பார்த்திருக்கிறேன். இதை விட இன்னும் அவரால் சிறப்பாக செயல்பட முடியும். ஓவல் டெஸ்ட்டில் வெற்றி பெற முடியும் என எங்களுக்கு தொடர்ச்சியாக அவர் நம்பிக்கையளித்தார். வெற்றி பெற முடியும் என்பதை நம்புமாறு அவர் எங்களுக்கு தொடர்ந்து வலியுறுத்தினார். விக்கெட் வீழ்த்த முடியும் என நம்பிக்கையளித்தார். வெற்றி பெறுவோமா என்பது உறுதியாக தெரியாதபோதும் முகமது சிராஜ் மிகுந்த நம்பிக்கையுடன் செயல்பட்டார் என்றார்.


**சிராஜ் முதலிடம்...**

இங்கிலாந்துக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரில் 23 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் முகமது சிராஜ் முதலிடம் பிடித்தார். ஓவலில் நடைபெற்ற கடைசி டெஸ்ட்டில் அவர் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## வீட்டுக்குப் போனதும் நான் கால்ல விழுகணும்:

# அஜித் - ஷாலினி வீடியோ வைரல்



**சென்னை, ஆக. 11-**

நடிகர் அஜித் - ஷாலினி இணையின் புதிய வீடியோ இணையத்தைக் கலக்கி வருகிறது.

குட் பேட் அக்லியின் பிரம்மாண்ட வெற்றியைத் தொடர்ந்து நடிகர் அஜித் குமார் கார் பந்தயங்களில் பங்கேற்பதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அடுத்ததாக, இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிக்க உள்ளதால் அதற்காகவும் தயாராகி வருகிறார். இந்த நிலையில், வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு நடிகர் அஜித் தன் மனைவி ஷாலினியுடன் பூஜையில் கலந்துகொண்டபோது அஜித் மறுத்தும் ஷாலினி தன் கணவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

உடனடியாக அஜித், "வீட்டுக்குப் போனதும் நான் விழுகணும்" எனச் சொல்லி சிரித்தார். இந்த வீடியோவை ஷாலினி தன் இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்து, " என் இதயத்தை உருக்குகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த வீடியோவை சமூக வலைதளங்களில் பலரும் பகிர்ந்து வருவதால் வைரலாகியுள்ளது.

## நியூசிலாந்து வீராங்கனை ஓய்வு

நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் ஆல் ரவுண்டரான தாம்சின் நியூட்டன் அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக இன்று அறிவித்துள்ளார். நியூசிலாந்து அணிக்காக கடந்த 2015-ம் ஆண்டு அறிமுகம் ஆன அவர் தனது கிரிக்கெட் கெரியர் முடிவடைவதாக அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்காக 10 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ள நியூட்டன் அதில் 56 ரன்களும் 11 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார். மறுபுறம் 15 டி20 போட்டிகளில் விளையாடி 22 ரன்களும் 9 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார். நியூசிலாந்து அணிக்காக கடைசியா 2021-ம் ஆண்டு விளையாடிய அவருக்கு அதன்பின் அணியில் இடம் கிடைக்கவில்லை. இத்தகைய சூழலில் அவர் தனது ஓய்வு முடிவை இன்று அறிவித்துள்ளார்.

## சிராஜை புகழ்ந்த வாசிம் அக்ரம்

இந்திய அணி சமீபத்தில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்த தொடர் 2-2 என்ற கணக்கில் தொடர் சமனில் முடிந்தது. மேலும் இத்தொடரின் கடைசி போட்டியில் முகமது சிராஜ் ஆட்டநாயகன் விருதையும், இந்தியாவின் சுப்மன் கில் மற்றும் இங்கிலாந்தின் ஹாரி புரூக் ஆகியோர் தொடர் நாயகன் விருதுகளையும் வென்றனர். இந்த தொடரில் முகமது சிராஜ் 23 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தினார்.

இந்நிலையில் இந்த தொடருக்கு பிறகு இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜை பாகிஸ்தான் அணியின் முன்னாள் ஜாம்பவான் வசிம் அக்ரம் பாராட்டியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- கடைசி நாளில் நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். அது நம்ப முடியாத முயற்சி. 186 ஓவர்கள் பந்து வீசிய பிறகும், கடைசி நாளில் இவ்வளவு கோபத்தை வெளிப்படுத்துவது சிராஜின் உற்சாகம் மற்றும் ஆர்வத்தின் அறிகுறியாகும் என்று பாராட்டியுள்ளார்.

## சிராஜ் வீட்டில் கோலி ஜெர்சி

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது சிராஜ் ஆண்டர்சன் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் முழுவதுமே 185 ஓவர்களை வீசி 23 விக்கெட்டுகளை கைப்பற்றி இந்திய அணியின் நல்ல நிலைக்கு காரணமாக திகழ்ந்தார். இந்த தொடரில் சிறப்பாக விளையாடிய சிராஜ்-க்கு விராட் கோலி பாராட்டுகளை தெரிவித்தார். சிராஜ்- விராட் கோலி சகோதரர்கள் போன்று பழகி வருகிறார்கள். கடந்து 2018-ம் ஆண்டு சிராஜுக்கு மோசமான ஐ.பி.எல். தொடராக இருந்தது.x அதன்பிறகு சிராஜின் திறனை கவனித்த விராட் கோலி அவரை ஆதரித்து ஆர்.சி.பி அணியில் வாய்ப்பு வழங்கியதோடு இந்திய அணிக்கும் கொண்டு வந்தார்.

எனவே முகமது சிராஜ்-க்கு எப்போதுமே விராட் கோலி மூத்த சகோதரர் போன்றவர். அவரிடம் இருந்து பெற்ற ஆலோசனை களை தான் சிராஜ் கையாள்கிறார். விராட் கோலியிடம் இருந்து அவர் கோபம் மற்றும் வெற்றிக்கான வெறி ஆகியவற்றை மட்டும் கற்றுக் கொள்ளவில்லை. உடற்தகுதியில் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பது குறித்த பிட்னஸ் ஆலோசனைகளையும் விராட் கோலியிடம் இருந்து தான் பெற்றுக்கொண்டார். இந்நிலையில் விராட் கோலி கையொப்பமிட்ட அவரது ஜெர்சியை சிராஜ் தனது வீட்டின் சுவற்றில் பிரேம் செய்து மாட்டியுள்ளார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த ஜெர்சி 2024-25 பார்டர்-கவாஸ்கர் டிராபியின் போது சிட்னியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கோலியின் கடைசி டெஸ்ட் போட்டியை நினைவுகூரும் வகையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சி.எஸ்.கே. அணியில்...? சஞ்சு பதில்

ஐ.பி.எல். தொடரில் சஞ்சு சாம்சன் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் விளையாடி வருகிறார். இதுவரை, 306 டி20 போட்டிகளில் விளையாடி 7,629 ரன்கள் குவித்துள்ளார். கடந்த சீசனில் காயம் காரணமாக பல போட்டிகளில் பேட்டிங் மட்டுமே செய்தார். சமீபத்தில் இவர் சி.எஸ்.கே. அணியில் இணைவதாக சமூக வலைதளங்களில் பேச்சு அதிகரித்தது. தோனிக்கும் முட்டி வலி, வயது காரணமாக அடுத்த சீசனில் விளையாடுவாரா எனத் தெரியவில்லை.

இந்நிலையில், அஸ்வின் தனது யூடியூப் நேர்காணலில் சஞ்சு சாம்சனிடன், "நான் கேரளாவுக்கு வந்துவிடுகிறேன். நீ தமிழ்நாட்டுக்கு மாறிவிடுகிறாயா?" எனக் கேட்டார். நீண்ட நேரம் சிரித்துக்கொண்டே இருந்த சாம்சன் , "அண்ணா, அதெல்லாம் என் கையில் இல்லை. நடந்தால் பார்ப்போம்" எனக் கூறிவிட்டார். டிசம்பரில் ஐ.பி.எல். மினி ஏலம் நடைபெறுவதால் அதில் சாம்சனை சி.எஸ்.கே. அணி வாங்க வாய்ப்பிருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# கோவையில் முதல்வர் ஸ்டாலின் 'ரோடு ஷோ'



**கோவை, ஆக.11-**

கோவை விமான நிலையம் முதல் அவிநாசி வரையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் 'ரோடு ஷோ' சென்றார்.

கோவை மற்றும் திருப்பூர், உடுமலைப் பேட்டையில் நாளை காலை அரசு நலத் திட்ட உதவிகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கவிருக்கிறார். தொடர்ந்து, பொள்ளாச்சியில் முன்னாள் முதல்வர் காமராஜர், வி.கே.பழனிசாமி, சி.சுப்பிரமணியம், பொள்ளாச்சி மகாலிங்கம் ஆகியோரது உருவச்சிலைகளை திறந்து வைக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, பரம்பிக்குளம் ஆழியாறு அணை கட்டுமானத்தின்போது உயிரிழந்தவர்களின் நினைவாகக் கட்டப்பட்ட நினைவரங்கத்தைத் திறந்து வைக்கும் முதல்வர் ஸ்டாலின், வி.கே.பழனிசாமி நினைவரங்கத்தையும் திறந்து வைக்கிறார். மேலும், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணிகள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியையும், திட்டத்தின் மாதிரி வடிவத்தையும் முதல்வர் பார்வையிடவுள்ளார்.

## பொதுமக்களின் பயன்பாட்டிற்காக

# 11 புதிய பேருந்துகளை கொடியசைத்து அமைச்சர் நேரு தொடங்கி வைத்தார்

**திருச்சி, ஆக. 11-**

திருச்சியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 11 புதிய பேருந்துகளை அமைச்சர் கே.என்.நேரு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



திருச்சி மண்டலத்தின் சார்பில் திருச்சி மாநகரின் பல்வேறு வழித்தடங்களில் புதிதாக இயக்கப்பட உள்ள 11 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நேற்று அமைச்சர் கே.என்.நேரு கொடியசைத்து தொடங்கி வைத்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் கே.என்.நேரு வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

நம் முதல்-அமைச்சரால் திறக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கான அனைத்து பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் (லிட்) திருச்சி மண்டலத்தின் சார்பில் திருச்சி மாநகரின் பல்வேறு வழித்தடங்களில் புதிதாக இயக்கப்பட உள்ள 7 புதிய தாழ்தள சொகுசுப் பேருந்துகள், 3 புறநகர் பேருந்துகள் மற்றும் 1 நகரப் பேருந்து உட்பட மொத்தம் 11 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தேன்.இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் வே. சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, ஆகியோருடன் அரசு அலுவலர்கள், போக்குவரத்து கழக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பா.ம.க. மகளிர் மாநாட்டில்

# பூரண மதுவிலக்கு உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றம்

**மயிலாடுதுறை, ஆக.11-**

பா.ம.க. மகளிர் மாநாட்டில் தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

பெண்ணுரிமையை காக்கவும், பெண்களுக்கு எதிரான வன்முறையை போக்கவும், பெண்கள் முன்னேற்றம் காணவும் பா.ம.க. மற்றும் வன்னியர் சங்கம் இணைந்து நடத்தும் மகளிர் பெருவிழா மாநாடு நேற்று பூம்புகாரில் நடைபெற்றது.

மாநாட்டில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், சரஸ்வதி ராமதாஸ், ஜி.கே. மணி எம்.எல்.ஏ., வன்னியர் சங்க தலைவர் பு.தா.அருள்மொழி மற்றும் முன்னாள் மத்திய மந்திரிகள், முன்னாள் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பா.ம.க. வன்னியர் சங்க மாநாட்டில் ராமதாசின் மகள் காந்திமதி முதல் தீர்மானத்தை வாசித்தார்.

**தீர்மானங்கள் முழுவிவரம்:-**

1 பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும்.

2 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்க வேண்டும்.

3 பாலியல் வன்கொடுமை செய்பவரை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி, தமிழ்நாட்டில் பாலியல் வன்கொடுமையே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

4 தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்த வேண்டும்.

5 தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் இல்லாத மாநிலமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6 நீட் தேர்வுக்கு செல்லும் மாணவிகள் சோதனை என்ற பெயரால் மன வேதனைக்கு உள்ளாக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

7 பாலியல் வன்கொடுமைகள் அதிகரிக்கும் நிலையில், அதை தடுத்திட பெண் காவலர்கள் அதிக எண்ணிக்கையில் நியமிக்கப்பட வேண்டும்

8 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பணிபுரிவோரின் ஊதியத்தையும், பணி நாட்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும்

9 மாணவிகள் தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வி பெற கூடுதலாக மகளிர் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட வேண்டும்

10 புற்றுநோயால் பாதிக்கப்படும் அணைத்து பெண்களுக்கும் இலவச சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

11 வன்னியர்களுக்கு 10.5% இடஒதுக்கிட்டை உடனயாக நடைமுறைப்படுத்த வேண்டும். அனைத்து சமுதாயத்திற்கும் உரிய இடஒதுக்கீட்டை வழங்க வண்டும்.

12 சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வேண்டும்

13 நெல்லுக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதேபோல் கூடுதல் நெல் கொள்முதல் சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட வேண்டும்.

14 பூம்புகார் மீன்பிடித் துறைமுக மீனவர்கள் உள்ளிட்ட தமிழ்நாடு மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

# பும்ராவுக்கு பயிற்சியாளர் ஆதரவு

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 'ஆண்டர்சன்-தெண்டுல்கர்' கோப்பைக்கான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் 2-2 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. இந்த தொடரில் பும்ரா பணிச்சுமையை கருத்தில் கொண்டு 3 போட்டிகளில் மட்டுமே ஆடினார். இப்படி பும்ரா இந்தத் தொடர் முழுவதும் விளையாடாமல் மூன்று போட்டிகளில் மட்டுமே விளையாடியது அவருக்கு எதிராக விமர்சனத்தை எழுப்பியுள்ளது.

இந்நிலையில் பும்ராவின் உடற்தகுதி தெரியாமல் யாரும் இப்படி பேசக்கூடாது என்று இந்திய முன்னாள் பயிற்சியாளர் பரத் அருண் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய அவர் கூறுகையில், "பும்ராவுக்கு முதுகில் ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது, மேலும் அறுவை சிகிச்சை முடிந்து அவர் நலமாக இருக்கிறார் என்பது போல் இல்லை.

மக்கள் அதனை புரிந்து கொள்ள வேண்டும். அவருடைய உடல் எதற்கு ஒத்துழைக்கிளென்று கூறினார்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 11.08.2025 முதல் 17.08.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் என வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளைச் செல்வம், துள்ளி விளையாடும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி வேகம் பிறக்கும். அதன் காரணமாக இலாபமும் அதிகரிக்கும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும்.

பரணி --

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் அடைவீர்கள். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். பயணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். சகோதரர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். பொதுவாகச் சோம்பல் அதிகரிக்கும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4- பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் ஏற்படும். பெரியவர்களின் ஆதரவால் ஆடை ஆபரணங்கள் சேரும். தொழில் வாய்ப்புகள் பெருகும். சிலரின் வீட்டில் திருமணம் போன்ற மங்கல நல்ல காரியங்கள் நடைபெறும். புண்ணிய ஸ்தல யாத்திரை களால் மகிழ்ச்சி பெருகும். நண்பர்களுடன் மகிழ்ச்சிகரமாக காலம் கழித்தாலும், அவர்களுடன் சுமுகமாக நடந்துகொண்டால் பகைமையை தவிர்க்கலாம். அரசுப் பணிபுரிபவர்களுக்கு மேல்மட்டத்தில் உள்ளவர்களின் ஆதரவால் பதவி உயர்வுகள் கிடைக்கும் வாய்ப்புகள் ஏற்படும். பஸ்ஸோ, ஸ்கூட்டரோ எதில் சென்றாலும் எச்சரிக்கையுடன் பயணிப்பது நல்லது. வியாபாரத்தில் இருந்து வரும் சிறு தடைகளால் இலாபங்கள் குறையலாம்.

ரோகிணி –

இந்த வாரம் இன்ப பயணங்களால் இனம் புரியாத மன மகிழ்ச்சி உண்டாகும். தாயின் அன்பு மிக்க அரவணைப்பால் மனக் கவலைகள் குறையும். சிலருக்கு ஞானிகளின் உபதேசம் கேட்பதால் அறிவு விருத்தியாகி, ஞான தன்மை ஏற்படும். புத்திர பாக்கியம், தொழில் வாய்ப்பு, பதவி உயர்வு, கௌரவப் பட்டங்கள் என அவரவர் தகுதிக்கு ஏற்ப வாழ்க்கையில் முன்னேற்றங்கள் ஏற்படும். வியாபாரம், தொழில் ஆகியவற்றில் ஏற்படும் புதிய தொடர்புகள் சிலருக்கு ஆதாயங்கள் பெருகும். அரசியல் பெரும் புள்ளிகளின் ஆதரவால், பதவியுயர்வு கள் சுலபமாக கிடைக்கும். சிலருக்குக் குழந்தைகள் மூலம் தொல்லையும், அவமானங்கள் ஆகியவை ஏற்படலாம். அரசு வகைத் தொல்லைகள் ஏற்படும். வீண் அலைச்சல் களுக்குப் பிறகு அது நிவர்த்தியாகும்.

மிருகசிரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் தனவரவு போதுமான அளவுக்கு இருக்கும். நல்ல புகழும், கௌரவமும் கோபத்தைக் குறைத்து பிறரிடம் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பல வழிகளிலும் எதிர்பாராத தனவரவு ஏற்படும். வீட்டில் பெரியவர்கள் ஆசியுடன் சுபகாரியங்கள் மிக விமரிசையாக நடக்கும். உடன் பிறப்புக்களின் மீது அன்பாய் இருங்கள். அரசுப் பணியாளர்கள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது மேன்மை அடையலாம். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் இருக்கும். வியாபாரிகளுக்கு கடன் கொடுத்தவர்கள் மூலம் சிக்கல்கள் ஏற்படலாம். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். உண்டாகும். துவக்கத்தில் பக்தி மார்க்கத்தில் மனம் ஈடுபடும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை- 1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். பெண்களின் தெய்வ காரிய ஈடுபாடு குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முன்னேற்றத்தை அளிக்கும். மேடைப் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், வாதம் புரிபவர்கள் ஆகியோருக்கு வாக்கு வன்மையால், வழக்கத்திற்கு அதிகமாக வருமானம் பெருகும். பெண்கள் மூலமாக நல்ல முன்னேற்றம் காண்பர். மாணவர்கள் போட்டி, பந்தயங்களில் வெற்றி அடைவர். சிலருக்குத் தொழிலில் தேவையற்ற அலைச்சல்களும், காரியத் தடைகள் ஏற்படலாம். அரசுப் பணியாளர்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைகள் கைக்கு வந்து சேரும். வியாபாரிகள், வாங்கிய கடன்களை அடைப்பது மிகவும் சிரமப்படுவார்கள். சிலருக்கு அதன் காரணமாக புதிய கடன்கள் ஏற்படும்.

திருவாதிரை ---

இந்த வாரம் இடைவிடாத முயற்சிகளால், வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். ஆடை ஆபரண சேர்க்கையால் ஆனந்தம் பெருகும். சுறுசுறுப்பற்ற நிலை காரணமாக உங்கள் செயல்பாடுகள் அனைத்திலும் தாமதங்கள் ஏற்படும். அரசிடம் எதிர்பார்த்த ஆதாயம் பெறுவதற்காக வீண் அலைச்சல்கள், செலவுகள் ஏற்பட்டாலும் முடிவில் காரிய சித்தி ஏற்படும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். புதிய தொழில் விரிவாக்க முயற்சிகளால், பொருளாதார நிலை உயரும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் பல திசைகளிலும் இருந்து பணவரவு அதிகம் இருக்குமாதலால் புதிய மனை அல்லது வீடு வாங்கும் யோகம் சிலருக்கு ஏற்படும். சிலர் புதிய இருசக்கர வாகனம் வாங்க திட்டமிடுவீர்கள். சிலர் அரசு பணி பெற ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் ஆவீர்கள். தங்கள் தனித் திறமை காரணமாக, பிறர் சாதிக்க முடியாத பெரும் சாதனைகளைச் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக சுற்று வட்டாரத்தில் புகழ் பெறுவீர்கள். ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. வாகனங்களில் செல்வதற்கு முன் பாதுகாப்பு உபகரணங்களின் (பிரேக் போன்ற) நன்நிலையைப் பரிசோதித்து எடுத்துச் சென்றால் விபத்தை தவிர்க்கலாம். மனைவியின் விருப்பங்களை நிறைவேற்ற பிரம்மப் பிரயத்தனம் செய்வார்கள்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் உங்கள் பொருளாதார நிலை போதுமான அளவு திருப்திகரமாக இருக்கும். செல்வமும், கௌரவமும் மிக்கவர்களின் நட்பால், நல்ல முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். குடும்பத்தில் ஆரோக்கியம் மேம்பட்டு, வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். தொலைதூர சுபச்செய்திகள் மகிழ்வைத் தரும். பிறருக்கு நன்மை செய்யும் இரக்க குணமுடையவர்கள் வாழ்க்கையில் நற்பலன்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களின் கிரகிக்கும் தன்மை கூடி, நினைவாற்றலும் கூடுவதால் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படும். வங்கி மற்றும் அரசு உதவிகள் கிடைத்து, புதிய தொழில் முயற்சிகள் மூலம் முன்னேற்றங்கள் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும்.

பூசம் --

இந்த வாரம் தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். அன்னையின் அன்பும், அரவணைப்பும் கவலைகளை மறக்கச் செய்யும். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம். சிலருக்கு இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உண்ணவும் நேரம் இருக்காது. தொழிலில் புதிய நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கலைத்துறையில் உள்ளவர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டு ஆதாயம் பெறுவர். சினத்தைக் குறைத்தால் வீட்டில் குழப்பங்கள் குறையும். தீயவர்களை கண்டவுடன் விலகுவது நல்லது. மேலதிகாரிகளின் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

ஆயில்யம் –

இந்த வாரம் பெண்களால் இலாபம் ஏற்படும். உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளவும். தொலை தூரச் செய்திகள் நன்மை அளிப்பதாகவும், மன மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருக்கும். நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்யும் விருந்தினரோடு பொழுதைக் கழிப்பதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டு உள்ளவர்களுக்குப் போதுமான தனவரவு இருக்கும். சுற்றத்தார் மூலமாகவும் பண உதவிகள் கிடைக்கும். பொதுவாகப் பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சிலருக்கு எந்த ஒரு செயல்பாடும் சுறுசுறுப்பற்ற மந்த கதியில் நடக்கும். கடன், செலவு என பணம் பற்றிய சிந்தனைகளே அதிகம் இருக்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் நீங்கள் எதிர்பாராத இடங்களில் இருந்து கூட பணவரவு தாராளமாக இருக்கும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து எச்சரிக்கையுடன் சென்றால் சிறு விபத்துகள் ஏற்படாமல் தவிர்க்கலாம். மற்றபடி, வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு அரசு உதவியுடன் வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். சுற்றத்தார் மூலமாகவும் பண உதவிகள் கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

பூரம் –

இந்த வாரம் உங்களுக்கு நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், . பக்தி சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஞானம் பெருகும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம்இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிலருக்கு இடமாற்றங்கள், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி பொங்கும் தருணங்களால் பந்துக்களின் உறவு பலப்படும். எவ்விதக் குறைகளும் இருக்காது. வீட்டுக்கு வந்த விருந்தினர்கள் வரவால் மனம் மகிழ்ச்சி ஏற்பட, அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் துய்ப்பீர்கள். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு மூலம் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். சிலருக்கு உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். பணிபுரியும் இடத்தில், தன்னிகரற்ற பணியின் காரணமாக பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள். வாகனங்களில் எச்சரிக்கையுடன் சென்றால் இருந்தால் விபத்தை தவிர்க்கலாம்.

அஸ்தம் –

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி, வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவீர்கள். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலை எழும். புதிய முதலீடுகளால் தொழிலில் ஏற்றம் காணலாம். அரசு உதவிகள் மூலம் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். மேலதிகாரிகளால் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், அதிகாரப் பொறுப்பும் கிடைக்கும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. தொழிலில் இருக்கும் நிலை தொடர்ந்தால் ஏற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு புதிய பொருட்களின் வரவால், பணவரத்து அதிகரிக்கும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தை வழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். பிறந்த நாள் விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். தொலைதூர செய்திகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். பயணங்களால் ஆதாயம் மற்றும் மகிழ்ச்சியும் ஏற்படும். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். தொழில் இலாபம் அதிகரிக்கும். திடீரென ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப் படுவதோடு தீரச் செயல்களுக்கான விருது கிடைக்கும்.

சுவாதி –

இந்த வாரம் தனவரவு நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும். உங்களுக்குப் பயணத்தின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். அரசு வழியில் எதிர்பார்க்கும் சகாயங்கள் தாமதம் இன்றிக் கிடைக்கும். உடன் பிறந்தவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பேச்சாளர்கள் மற்றும் புத்தக வெளியீட்டாளர் களுக்கும் தொழிலில் வெற்றி கிடைக்கும். அரசு உதவியுடன் விரிவாக்கத் திட்டங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். நல்ல முன்னேற்றம் காண்பர். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் மூலம் பணமும், புகழும் கிடைக்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். பணிகளைக் கடமையுணர்வுடன் நிறைவேற்றும் அரசுப் பணியாளர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு நிச்சயம் இருக்கும். குடும்பத்தினரிடையே வீண் மனஸ்தாபங்கள் ஏற்படாமல் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். சிலர் பொது இடங்களில் தீயவர்களை கண்டு விலகிச் செல்வது, சிக்கல்களில் இருந்து விடுபட உதவும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் கெட்டி மேளம் கொட்டும் நேரம் வரும். பெற்றோர்களின் மனம் பேரின்பம் அடையும். முன்னர், கஷ்டம், முடியாது என நினைத்துக் கை விட்ட வேலையை தங்கள் திறமை கொண்டு வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத் தொடர்பு மற்றும் சுற்றுலா போன்ற இனிய பயணங்கள் இலாபமும், இன்பமும் தரும். அரசுப்பணிக்கு மனுச் செய்தவர்களுக்கு, அரசிடமிருந்து பணிக்கான அனுகூலமான பதில்களைப் பெறுவார்கள். தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் கடமையுணர்வுடன் செயல்பட்டால் நல்ல ஊதியம், பாராட்டு ஆகியவற்றைப் பெறுவர். சுற்றத்தாரிடையே நல்ல பெயர் எடுப்பீர்கள். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

அனுஷம் –

இந்த வாரம் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் ஏற்படும். எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும்.

கேட்டை –

இந்த வாரம் போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். குழந்தைகளிடம் கண்டிப்பு காட்டாமல் அன்பாகப் பழகும் குணம் வேண்டும். சிலருக்குக் குழந்தைகள் மூலமாகத் தொல்லைகள் ஏற்படலாம். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. பெண்களால் இலாபம், பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். பெரும் புள்ளிகளின் அறிமுகத்தால் நன்மைகள் ஏற்படும். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் வாடிக்கையாளரை கவர்வது எளிது. புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

பூராடம் –

இந்த வாரம் மகான்களின் தரிசனம் கிடைக்கும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும் போது நெருங்கிய உறவுகளின் ஒத்துழைப்பால் நிகழ்ச்சி சிறப்பாக அமையும். நண்பர்களும் சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் வருமானம் பெருகி, வாழ்க்கையும் வளமாகும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். தந்தை வழி உறவினர்களால் பிரச்சனைகள் ஏற்படலாம். உயர் அதிகாரிகளிடம் சுமூகமாக நடந்து கொள்வது முன்னேற்றத்தைத் தரும். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் மன அமைதி கிடைக்கும். பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். வித்தைகளில் தேர்ச்சியும் அறிவுத் திறனும் கூடும். உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும். சகோதர முன்னேற்றம், காரிய சித்தி, தலைமைப் பதவி ஆகியவை ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு சாதகமான நிலை உருவாகி பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்- 1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சகோதர முன்னேற்றம், காரிய சித்தி, தலைமைப் பதவி ஆகியவை ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். வித்தைகளில் தேர்ச்சியும் அறிவுத்திறனும் கூடும். உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு சாதகமான நிலை உருவாகி பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். கல்வியில் குழந்தைகளின் தேர்ச்சி பெற்றவர்களை பெருமை கொள்ளச் செய்யும். அரசியலில் சிலருக்கு மாவட்ட பொறுப்புகள் தேடி வரும்.

திருவோணம்-

இந்த வாரம் வேலையில் சிரத்தையும், கடின உழைப்பும் உங்களுக்குத் தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். அரசியலில் சிலருக்கு மாவட்ட பொறுப்புகள் தேடி வரும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் எளிதில் உங்கள் பணி சுலபமாக முடியும். செலவுகளைக் குறைத்து கடன் வாங்கும் நிலையை தவிர்க்கவும். உயர் அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த அளவுக்கு மேல் உயர்வுகள் இருக்கும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்களை எதிர்பார்க்கலாம். வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். கூட்டாளிகளின் நியாயமற்ற செயல்பாடுகள் எரிச்சலைத் தரும். தொழிலில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்கு அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். கல்வியைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

சதயம்-

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். உங்களுக்கு அனைத்து சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பல வழிகளில் வருமானம் கூடுதலாக வரும். . பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். . பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். அரசாங்கத்தால் இலாபம் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் அதிகப்படியான வருமானங்கள் கிடைக்கும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். உறவினர் இல்ல விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள் திருமணமாகாத பெண்களுக்குத் திருமணத்துக்கான முயற்சிகள் நடந்து முடியும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் பாக்கியம் ஏற்படும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி புதிய வேகம் பிறக்கும்.

ரேவதி-

இந்த வாரம் சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். குடும்பத்தாருக்கு அவரவர்களின் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். நல்லுறவுகளின் அனுசரணையோடும், அன்பாலும் குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் சீராகும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார் அன்வர் ராஜா



சென்னை, ஆக.11-

தி.மு.க. இலக்கிய அணித் தலைவராக நியமிக்கப்பட்ட அன்வர் ராஜா, முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

2026 சட்டமன்ற தேர்தலையொட்டி அ.தி.மு.க.-பா.ஜனதா இடையே மீண்டும் கூட்டணி மலர்ந்ததால், அக்கட்சியின் முன்னாள் எம்.பி. அன்வர் ராஜா அதிருப்தி அடைந்தார். இதையடுத்து அவர் கடந்த மாதம் 21-ந்தேதி முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து, தி.மு.க.வில் இணைந்தார்.

கட்சியில் இணைந்த 20 நாளில் அவருக்கு தி.மு.க.வில் பதவி வழங்கப்பட்டுள்ளது. அவர், தி.மு.க. இலக்கிய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் நேற்று வெளியிட்டார்.

இந்த நிலையில், தி.மு.க. இலக்கிய அணித் தலைவராக நியமிக்கப்பட்ட அன்வர் ராஜா, சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள இல்லத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

தி.மு.க. இலக்கிய அணி தலைவராக முன்னாள் அமைச்சர் இந்திர குமாரி இருந்து வந்தார். அவர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ந் தேதி உடல்நலக்குறைவால் மரணம் அடைந்தார். இந்த நிலையில் தி.மு.க. இலக்கிய அணி தலைவராக அன்வர் ராஜா நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தகுதி உள்ள அனைவருக்கும் மகளிர் உரிமைத்தொகை

## அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் உறுதி



ராஜபாளையம், ஆக.11-

தகுதி உள்ள அனைத்து பெண்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என வருவாய்த் துறை அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ராஜபாளையம் அருகே சேத்தூர் பேரூராட்சியில் ரூ.5.96 கோடி மதிப்பில் குளிர் சாதன வசதி உடன் திருமண மண்டபம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தலைமை வகித்தார். எம்.பி ராணி, எம்.எல்.ஏ தங்க பாண்டியன் முன்னிலை வகித்தனர். இதில், வருவாய்த் துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

விழாவில் பேசிய அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கூறியதாவது: ''கடந்த முறை பெறப்பட்ட 1.60 கோடி விண்ணப்பங்களில் 1.15 கோடி பேருக்கு மகளிர் உரிமை தொகை வழங்கப்பட்டது.

தற்போது ''உங்களுடன் ஸ்டாலின்'' முகாமில் மகளிர் உரிமை தொகை விண்ணப்பம் பெறப்பட்டு உடனடியாக ஆன்லைனில் பதிவு செய்யப்படுகிறது.

விரைவில் தகுதி உள்ள அனைவருக்கும் மகளிர் உரிமை தொகை வழங்க வேண்டும் என முதல்வர் கூறி உள்ளார்'' என்று அமைச்சர் கூறினார்.

முன்னதாக ராஜபாளையம் மாயூரநாத சுவாமி கோயிலில் ரூ.70 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் அமைக்கும் பணியை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மதுரை மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் மணிகண்டன், பேரூராட்சி தலைவர் பால சுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மீண்டும் முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்பார்: அமைச்சர் கே.என்.நேரு

திருச்சி, ஆக.11-

இ.பி.எஸ். கனவு பலிக்காது, மீண்டும் முதல்வராக மு.க. ஸ்டாலின் பதவியேற்பார் என்று அமைச்சர் கே. என். நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் முதல்முறையாக 11 தாழ்தளப் பேருந்துகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று துவக்கி வைத்தார். இப்பேருந்துகளில் தாழ்தள வசதி, மாற்றுத்திறனாளிகள் ஏறி இறங்க சறுக்கு நிலை, தானியங்கி கதவு, ஓட்டுநர் அறிவிப்பு, சிசிடிவி கண்காணிப்பு உள்ளிட்ட நவீன வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், "திருச்சி பஞ்சப்பூர் பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகப் பணிகள் மேலும் 2 மாதங்களில் நிறைவுபெற்று திறக்கப்படும் என்றார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் இ.பி.எஸ். குறித்த கேள்விக்கு, " தி.மு.க. கூட்டணியில் கருத்து வேறுபாடு இல்லை; அ.தி.மு.க.வில் தான் கருத்து வேறுபாடு உள்ளது.

அதனால் தான் ஓ.பி.எஸ். இ.பி.எஸ்ஸை விட்டு வெளியேறினார். இபி.எஸ். கனவு பலிக்காது; மீண்டும் தமிழக முதல்வராக மு.க. ஸ்டாலின் பதவியேற்பார். கூட்டணி கட்சிகளை முதல்வர் அரவணைத்து வழிநடத்தி வருகிறார்" என்று தெரிவித்தார்.

" தி.மு.க.வை விமர்சித்தால் தான் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள முடியும் என அன்புமணி ராமதாஸ் நினைத்து தொடர்ந்து விமர்சித்து வருகிறார்" என்றும், பிரதமர் நரேந்திர மோடி "ஏற்கனவே எட்டு முறை வந்துள்ளார். அவர் வந்தாலும், கடந்த முறை 40-க்கும் 40 தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணி வென்றது" என்றும் தெரிவித்தார்.

## 3-ம் கட்ட தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்:

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து இன்று தொடங்குகிறார் இ.பி.எஸ்.



கிருஷ்ணகிரி, ஆக.11-

எடப்பாடி பழனிசாமி தனது 3-ம் கட்ட பிரச்சார சுற்றுப்பயணத்தை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று தொடங்குகிறார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற தலைப்பில் சட்டசபை தொகுதிகள் வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அவரது 3-ம் கட்ட சுற்றுப்பயணம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்குகிறது. இன்று 11-ந்தேதி தொடங்கி நாளை 12-ந்தேதி ஆகிய 2 நாட்கள் நடக்கிறது. இதற்காக இன்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தருகிறார். அன்றைய தினம் தளி, ஓசூர், வேப்பனப்பள்ளி சட்டசபை தொகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்கிறார்.

அதன்படி இன்று 11-ந் தேதி (திங்கட்கிழமை) கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக் கோட்டை அடுத்துள்ள காடு செட்டிப் பள்ளிக்கு மாலை 3.40 மணிக்கு எடப்பாடி பழனிசாமி வருகிறார். அங்கு அவருக்கு கட்சியினர் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். அதனை அடுத்து ராயக்கோட்டையில் 4.10 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடக்கிறது. தேன்கனிக்கோட்டையில் மாலை 5.30 மணிக்கு பொதுக்கூட்டம் நடக்கிறது. ஓசூர் ராம்நகர், சூளகிரி ரவுண்டானா ஆகிய இடங்களில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. பின்னர் அவர் ஓசூரில் தனியார் தங்கும் விடுதியில் இரவு ஓய்வு எடுக்கிறார்.

பின்னர் நாளை 12-ந்தேதி காலை 8 மணிக்கு ஓசூரில் புதிய மாவட்ட கட்சி அலுவலகத்தை எடப்பாடி பழனிசாமி திறந்து வைக்கிறார். அங்கிருந்து புறப்பட்டு அவர் ஓசூர் சந்திர சூடேஸ்வரர் மலைக்கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கிறார். இதனையடுத்து ஓட்டலில் சிறுகுறு தொழில் நிறுவன பிரதிநிதிகள், விவசாயிகள், வணிகர் சங்க பிரதிநிதிகள் சந்திப்பு மற்றும் தனியார் பள்ளி பிரதிநிதிகள், பில்டர் ஓனர்ஸ் அசோசியசன், நியமன தேர்தலில் தேர்ச்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் கூட்டமைப்பு பிரதி நிதிகள், தனியார் பஸ் உரிமையாளர்கள் ஆகியோர்களை சந்தித்து எடப்பாடி பழனிசாமி பேசுகிறார். பின்னர் அவர் 12.30 மணிக்கு முக்கிய விருந்தினர்கள், கூட்டணி கட்சியினரை சந்தித்தும் பேசுகிறார்.

இதையடுத்து எடப்பாடி பழனிசாமி மாலை 4.30 மணிக்கு ஓசூரில் இருந்து புறப்பட்டு சூளகிரி தேசிய நெடுஞ்சாலை வழியாக கிருஷ்ணகிரி பேருந்து நிலையம், டி.பி.ரோடு, காந்தி சிலை வழியாக வந்து அரசு மருத்துவமனையில் இருந்து (ரோடு ஷோ) நடைபயணம் மேற்கொள்கிறார்.

கிருஷ்ணகிரி ரவுண்டானா வாசவி கேப் அருகில் மாலை 5 மணிக்கு எடப்பாடி பழனிசாமி உரையாற்றுகிறார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 7.30 மணிக்கு பர்கூர் எம்.ஜி.ஆர். சிலை அருகிலும், 8.30 மணிக்கு ஊத்தங்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். சிலை அருகிலும் மக்களை சந்திக்கிறார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வருகையை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளன. அ.தி.மு.க.வில் உள்ள பல்வேறு அணிகளின் சார்பில் எடப்பாடி பழனிசாமிக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி, கொள்கை பரப்பு செயலாளர் மு.தம்பிதுரை, மாவட்ட செயலாளர்கள் அசோக்குமார், பாலகிருஷ்ணரெட்டி மற்றும் கட்சி நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

## கர்நாடகா, பெங்களூரு மாநகரில்

# வந்தே பாரத் ரயில், மெட்ரோ சேவை: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



பெங்களூரு, ஆக.11-

பெங்களூருவில் உள்ள கே.எஸ்.ஆர் ரயில் நிலையத்தில் இருந்து பிரதமர் மோடி மூன்று வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பெங்களூருவில் உள்ள கே.எஸ்.ஆர் ரயில் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் நரேந்திர மோடி மூன்று வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். பெங்களூருவிலிருந்து பெலகாவி, அமிர்தசரஸ் முதல் ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கத்ரா, நாக்பூர் (அஜ்னி) முதல் புனே வரை செல்லும் ரயில்கள் இதில் அடங்கும்.

மஞ்சள் தட மெட்ரோ தவிர, மற்றவை இரண்டும் காணொளி வாயிலாக தொடங்கப்பட்டன. இந்த அதிவேக ரயில்கள்பயண நேரத்தைக் குறைப்பதுடன், பயணிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த பயண அனுபவத்தை வழங்கும் என அதிகாரிகள் கூறினர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, பெங்களூருவில் மக்கள் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட, மஞ்சள் வழித்தட மெட்ரோ சேவையை பிரதமர் மோடி, நேற்று மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்துள்ளார். இதன் நீளம் 19 கி.மீ.க்கும் அதிகமாகும். 16 நிலையங்களைக் கொண்ட இத்திட்டம் சுமார் ரூ.7,160 கோடி மதிப்புடையது. இந்த மஞ்சள் பாதை திறக்கப்பட்டதன் மூலம், பெங்களூருவில் செயல்பாட்டு மெட்ரோ நெட்வொர்க் தூரம் 96 கி.மீ.க்கும் அதிகமாக அதிகரிக்கும். பெங்களூருவின் தெற்கு மாவட்டங்களில் எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் புதிய மெட்ரோ பாதையால் பயனடைவார்கள் என்று பா.ஜ.க. தலைவர் பி.ஒய்.விஜயேந்திரா தெரிவித்துள்ளார்.

## அரசு மருத்துவமனைகளில்

# டாக்டர்கள் பற்றாக்குறை இல்லை: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, ஆக.11-

அரசு ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் பற்றாக்குறை என்பது கிடையாது என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:- "முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2-ந்தேதி நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்தார். ஒரே நாளில் தமிழ்நாடு முழுவதும் 38 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து, சென்னை, ஊட்டி தவிர்த்து 36 இடங்களில் முகாம் நடத்தப்பட்டது. கடந்த வாரம் நடந்த முகாமில் 44 ஆயிரத்து 418 பேர் மருத்துவ பயன் பெற்றிருந்தார்கள்.

இந்த வாரம் நடந்த 36 முகாம்களில் 48 ஆயிரத்து 418 பேர் பயன் பெற்றுள்ளனர். இந்த முகாம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கிறது.

இதேபோல, ரூ.110 கோடி மதிப்பில் செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை ஆஸ்பத்திரி கட்டிடம் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் என மொத்தம் ரூ.115 கோடி மதிப்பீட்டில் மாவட்ட தலைமை ஆஸ்பத்திரியை முதல்வர் மு.க.ஸ்டாலின் பயன்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளார்.

அரசு ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் பற்றாக்குறை என்பது கிடையாது. டாக்டர்கள், நர்சுகள் பற்றாக்குறை என்பது தொடர்ச்சியாக கூறப்படுகிற பொய்யான குற்றச்சாட்டு. வேண்டுமென்றே சிலர் இந்த பொய்யான குற்றச்சாட்டை பரப்பி வருகிறார்கள்.''

இவ்வாறு அமைச்சர் கூறினார்.



மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து மேற்கு 4-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் அதன் பகுதி செயலாளர் பைக்காரா முத்துவேல் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், கு.திரவியம், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், ஏ.பார்த்திபன், வக்கீல் தமிழ்செல்வன், சக்திவிநாயகர்பாண்டியன், பைக்காரா கருப்பசாமி, கவுன்சிலர் பி.கே.எம்.மாரிமுத்து மற்றும் முனியாண்டி, விநாயகமூர்த்தி. வேளாங்கண்ணி, ரவி, முத்தீஸ்வரன், ராம்குமார், பி.கர்ணா, அருண்குமார் உள்ளனர்.



உசிலம்பட்டி தொகுதியில் உள்ள 58 கால்வாய்களுக்கு தண்ணீர் திறக்கக்கோரி நேற்று மதுரை மாவட்ட கலெக்டர் கே.ஜே.பிரவீன்குமாரிடம் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் கோரிக்கை மனு அளித்தார். இதில் மகேந்திரன், கே.தமிழரசன், நீதிபதி, எஸ்.எஸ்.சரவணன், கே.மாணிக்கம், எம்.வி.கருப்பையா, பா.வெற்றிவேல், தனராஜன், புளியங்குளம் ராமகிருஷ்ணன், அன்னபூர்ணா தங்கராஜ், அன்பழகன், ராமசாமி, கண்ணன், காளிதாஸ், அரியூர் ராதாகிருஷ்ணன், தமிழ்செல்வம், வக்கீல் திருப்பதி உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.